
உ

சிவமயம்



# சைவநீதி

# SAIVANEETHI


| | | | |
|---|---|---|---|
| மலர் 10 | விய - மாசி - பங்குனி | FEBRUARY - MARCH 2007 | இதழ் 11, 12 |




விலை 25/=

உ
சிவமயம்
'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவநீதி
SAIVANEETHY

# சைவநீதி



மலர் 10 (விய - மாசி - பங்குனி) சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 11, 12

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 20

### விடம் தீர்க்கும் பதிகம்

திருநாவுக்கரசர் அப்பூதி அடிகள் வேண்டுதலின் பேரில் அவர் இல்லத்தில் உணவருந்த அமர்ந்தார். வாழை இலை அறியச் சென்ற அப்பூதியடிகளாரின் மூத்த மகன் பாம்பு கடித்து இறந்து விடுகிறான். இதை உணர்ந்த நாவுக்கரசர் இப் பதிகத்தைப் பாடித் திருநீறு அளிக்க இறந்தவன் உறங்கி எழுபவனைப்போல் எழுந்து வந்தான்.

இன்றும் இந்தப் பதிகத்தைப் பலமுறை பாராயணம் செய்து, திருநீறு பூசினால் பாம்பு, பல்லி, தேள் போன்ற விஷக்கடிகள் ஒன்றும் செய்யாது என்பது திண்ணம்.

திருச்சிற்றம்பலம்

பொது — பண்: இந்தளம்

ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம்இடு வெண்டலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது தானே. 1

இரண்டு கொலாம் இமையோர் தொழுபாதம்
இரண்டு கொலாம் இலங்குங்குழை பெண்ணாண்
இரண்டு கொலாம் உருவம் சிறு மான்மழு
இரண்டு கொலாம் அவர் எய்தினதாமே. 2

மூன்று கொலாம் அவர் கண்ணுத லாவன
மூன்று கொலாம் அவர்சூலத்தின் மொய்யிலை
மூன்று கொலாம் கணை கையதுவில் நாண்
மூன்று கொலாம் புரமெய்தன தாமே. 3

நாலு கொலாம் அவர்தம் முகம் ஆவன
நாலு கொலாம் சனனம் முதற் தோற்றமும்
நாலு கொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலு கொலாம் மறை பாடின தாமே. 4

அஞ்சு கொலாம் அவர் ஆடரவின் படம்
அஞ்சு கொலாம் அவர் வெல் புலனாவன
அஞ்சு கொலாம் அவர் காயப்பட்டான்கணை
அஞ்சு கொலாம் அவர் ஆடின தாமே. 5

ஆறு கொலாம் அவர் அங்கம் படைத்தன
ஆறு கொலாம் அவர்தம் மகனார் முகம்
ஆறு கொலாம் அவர்தார்மிசை வண்டின் கால்
ஆறு கொலாம் சுவை ஆக்கின தாமே. 6

ஏழு கொலாம் அவர் ஊழி படைத்தன
ஏழு கொலாம் அவர்கண்ட இருங்கடல்
ஏழு கொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழு கொலாம் இசை யாக்கின தாமே. 7

எட்டு கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்
எட்டு கொலாம் அவர் சூடும் இனமலர்
எட்டு கொலாம் அவர் தோளிணை யாவன
எட்டு கொலாம் திசை ஆக்கின தாமே. 8

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடம் தானே. 9

பத்துக் கொலாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக் கொலாம் எயிறுந்நெரிந் துக்கன
பத்துக் கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே. 10

திருச்சிற்றம்பலம்

# பொருளடக்கம்

பக்கம்

பெரிய புராணத்தில் அடியார் பெருமை ......3

அருளிச் செயல்களைப் பிழையின்றிக் கையாளுவோம் ......6

ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர ......9

சமயமும் வாழ்க்கையும் ......11

பொது மக்கள் சைவம் ......14

உயர்ந்த ஒரு வழி ......17

ஸ்ரீ ருத்ராக்ஷ மஹிமை ......22

இலையமுதம் ......24

## சந்தேகம் தெளிதல்

- திருமுருக கிருபானந்த வாரியார்

கேள்வி: மந்திரம், தந்திரம், விருந்து, மருந்து ஆகிய இந்த நான்கு சொற்களும் நற்றமிழில் விளம் என்ன?

பதில்: மந்திரம் ஒரு நோயைத் தீர்க்க வேண்டுமானால் மணி, மந்திரம், ஒளஷதம் மூன்றையும் உபயோகப் படுத்துவார்கள். மணி என்பது ரஸமணியாகும். அந்த ரஸமணி அநேக நோய்களைத் தீர்க்கும். ரஸமணி கிடைக்காதவர்கள் மந்திர சக்தியால் நோயைத் தீர்ப்பார்கள். மந்திர சக்தி அமையப் பெறாதவர்கள் மருந்தை உபயோகப்படுத்துவாகள்.

தந்திரம்: இது வேறு உபாயங்களினால் நோயைத் தீர்ப்பது. ஒரு பெண்ணுக்குப் பிரசவ சமயத்தில் குழந்தையின் வலக்கை வெளிப்பட்டு விட்டது. அவள் மரணத் தருவாயில் துடிக்கும் பொழுது, ஒரு மருத்துவ அறிஞர் எரிகின்ற விளக்கினால் கையைச் சுட்டார். வயிற்றிலிருந்த குழந்தை கையை இழுத்துக் கொண்டு விட்டது. பிறகு சுகப் பிரசவம் ஆயிற்று. இப்படிச் செய்வது தந்திர சிகிச்சையாகும்.

விருந்து: இச்சொல்லுக்குப் புதுமை என்பது பொருள். புதுமையான சிகிச்சையால் நோயைத் தீர்ப்பார்கள்.

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நர்வாகிகள் -

# பெரிய புராணத்தில் அடியார் பெருமை

சிவ. சண்முகவடிவேல்

சிவனடியார்கள் சிவசின்னம் தரிப்பவர்கள். நலம்புரியும் உருத்திராக்க மாலை அணிந்த திருமேனியுடையவர்கள். அடியார்கள் திருமேனியில் பூசும் நீறு போல உள்ளமும் புறமும் தூய்மை யானவர்கள்.

அடியார்கள் மனத் தூய்மையினாலும் சிவ ஒளியாலும் திருநீற்றின் ஒளியாலும் உலகங்கள் யாவையும் ஒளி மயமாக விளங்குவார்கள். வாக்கில் அடங்காத பெருமையில் பிறங்குவார்கள்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்கள் தமது நிலையிற் கலங்கி னாலும் தமது நிலைமை தளம்பாதவர்கள். பஞ்ச பூதங்கள் தம்நிலை தடுமாறும் தன்மையி னைத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவாக்கினால் தெளியலாம்.

**'வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்**
**வரையும் தானந் துளங்கித் தலைதடு மாறிலென்**
**தண்கடலும் மீனம் படிலென் விரிசுடர் வீழிலென்'**

அந்நிலையிலும் அடியவர்கள் உமையொரு பாகரான சிவபெருமானுடைய மலரடிகளை மறவாத மாண்பினை உடையவர்கள் சிவனடியார்கள்.

ஞானவான்கள் ஓதிய அன்பினால் விளைந்த பத்தி நெறியின் பாலராகி ஆரா அமுதினை ஆர்ந்த அன்பினர்கள். குற்றம் குறுகப் பெறாதவர்கள். குணம் என்னும் குன்று ஏறி நின்றவர்கள்.

அடியார்கள் களித்தல் கவலுதல் கண்டறி யாதவர்கள். பழிப்பு இல்லாதவர்கள். திருநின்ற செம்மையே செம்மையாகத் திகழ்பவர்கள்.

வாழ்வையும் தாழ்வையும் சமமாகக் கருது வார்கள் அடியார்கள். கூட்டி வைக்கும் அன்பு மேலீட்டினால் கும்பிடும் கொள்கையில் நிற்பவர்கள். வீட்டின்பத்தில் விருப்பற்றவர்கள். கும்பிடுங் கொள்கையால் பிறப்பிற்கு அஞ்சாத வர்கள்.

**துறக்கப் படாத உடலைத் துறந்துவெந்தூது வரோ**
**டிறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து**
**பிறப்பன் பிறந்தால் பிறையாளி வார்சடைப்**
**பிஞ்ஞகன்பேர்**
**மறப்பன் கொலோ என் றென்னுள்ளங் கிடந்து**
**மறுகிடுமே**

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

**'கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி,**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.'**

என்னும் கொள்கையோடு தேவாரத்தை ஒப்பிட்டுப் பார்க்க.

**கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்**
**ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்**
**கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.**

(பெரியபுராணம்)

அடியார்கள் உருத்திராக்க மணி

**பேதைமைஒன்று என்பதுஒன்று யாதுஎனின் ஏதம்கொண்டு**
**ஊதியம் போக விடல்** **831**

பேதமை என்று சொல்லப்படும் ஒரு குற்றம் யாது என்றால், தனக்குக் கேடு தருவனவற்றைக் கைக் கொண்டு ஆக்கம் தருவனவற்றை விட்டு விடுதலாம்.

மாலையை ஆரமாகத் தரிப்பார்கள். கிழிந்து கந்தையான உடையை ஆடையாக அணி வார்கள். சிவதொண்டைக் கடமையாகத் தாங்கி யவர்கள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் திருநாவுக்கரசு நாயனா ருடைய வாக்கினோடு ஒப்பிட்டுப் பார்க்க இவ்வுலகில் சிவப்பணி தவிர்ந்த எவற்றையும் கடமையாகக் கருதாதவர்கள் ஒன்றாலும் குறைவில்லாத வர்கள். அடியார்களுடைய வீரம் வாக்கிற்கு அப்பாற்பட்டது. அடியவர்கள் அறிதற்கரியவர்கள். அவர்கள் புகழ் அகிலங்களுக்கு அப்பாற்பட்டது.

சேக்கிழார் பெருமான் திருக்கூட்டச் சிறப்பில் செப்புவார்.

**ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே**
**பார மீசன் பணியல தொன்றிலார்**
**ஈர வன்பின் யாதுங் குறைவிலார்**
**வீர மென்றால் விளம்புந் தகையதோ.**

சிவனடியார்கள் **'ஒன்று காதலித்து உள்ளம் ஓங்கியவர் எந்நிலையில் நின்றாலும் எக் கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருள்'** எனக் கொண்டவர்கள்.

திருவாரூர்ப் பெருமான் அடியார் பெருமை யை நம்பியாரூரருக்கு அருளிச் செய்யும் திறம் சிந்தனைக்குத் தேன் விருந்து.

அடியார்கள் பெருமையினால் தாமே தமக்கு ஒப்பானவர்கள் தாய் சேயைப் பேணுவது போல இடையறாது எம்மைப் பேணுவதால் எம்மைத் தமக்கு உரிமையாகப் பெற்றார்கள். எம்மோடு ஒன்றித்த நிலையினால் உலகத்தை வெல்வார் கள். பிறவிப் பிணி இல்லாதவர்கள். ஊனம் ஒன்றும் இல்லாதவர்கள். எவராலும் நிற்றற்கரிய நிலையில் நின்றவர்கள். அன்பு நிறையப் பெற்றவராதலினால் இன்பத்தை நுகர்வார்கள். இம்மை மறுமை இன்ப துன்பங்கள் கடந்த நிலையைப் பெற்றவர்கள். அத்தகைய அடியார்களை நீ அடைவாயாக"

என்று நம்பியாரூரரை நல்லடியார் களிடத்தில் ஆற்றுப்படுத்தினார், அமரர் நாடாளாது ஆரூர் ஆண்ட அம்மானார்.

**பெருமையாற் றம்மை யொப்பார்**
**பேணலா லெம்மைப் பெற்றார்**
**ஒருமையால் உலகை வெல்வார்**
**ஊனமே லொன்று மில்லார்**
**அருமையா நிலையி னின்றா**
**ரன்பினா லின்ப மார்வார்**
**இருமையுங் கடந்து நின்றார்**
**இவரைநீ யடைவா யென்று'**

அடியார் பெருமையை அறிந்து அடியா ருக்கு ஆற்றிய செயற்கருஞ் செயலில் ஒரு சில எடுத்துக் காட்டுகின்றோம். விறன்மிண்ட நாயனார்.

1. **சேணார் மேருச் சிலைவளைத்த சிவனார டியார் திருக்கூட்டம்**
**பேணா தேகு மூரனுக் கும் பிரானார் தன்மைப் பிறைசூடிப் பாடல்**
**பூணா ரரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரைக்க மற்றவரால்**
**கோணா வருளைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார்.**

2. **ஞால முய்ய நாமுய்ய**
**நம்பி சைவ நன்னெறியின்**
**சீல முய்யத் திருத்தொண்டத்**
**தொகைமுன் பாடச் செழுமறைகள்**
**ஓல மிடவு முணர்வரியா**
**ரடியா ருடனா முளதென்றால்**

**பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை**
**கைஅல்ல தன்கண் செயல்** 832

ஒருவனுக்கு பேதைமை எல்லாவற்றிலும் பெரும் பேதைமையாவது, தனக்கு தகாத ஒழுக்கத்தில் பெரு விருப்பம் கொள்ளுதல்.

ஆல மமுது செய்தபிரா
னடியார் பெருமை யறிந்தாரார்.

அப்பூதியடிகள்:

பெறலரும் புதல்வன் றன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினின் மறைந்து
வைத்தே பாடல்
அறவிது தெரியா வண்ண மமுதுசெய் விப்போ மென்று
விறலுடைத் தொண்ட னார்பால் விருப்பொடு விரைந்து
வந்தார்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

அப்பர்தா மெங்குற்றா ரிப்பொழுதென்
றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்திருநா வுக்கரசர் செப்புவார்
ஒப்பரிய தவஞ்செய்தே னாதலினா லும்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன்
யானென்றார்.

அடியார் பெருமைக்குச் சான்று காட்டுவது போல அமைந்த தமிழ் வேத வாக்குகளில் சில இவை:

'ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே' (2)

'கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. (6)

'என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே (7)

'அத்தா ஆலங் காடாஉன்
அடியார்க் கடியேன் ஆவேனே. (இதுவும்)

'உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம். (8)

அறிதற் கரிய அடியார் பெருமை அளவில டங்காததவை திருமுறைகளில் அனந்தம் விரிவஞ்சி விடுகின்றோம். ஆண்டாண்டு கண்ணுற்று இன்புறுக.

அடியாரிடத்தில் அன்பு செய்க.
அரனாரை அறிவிப்பவர் அவரேயாவார்.


சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு
ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு
ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

*C. Navaneethakumar,*
*No. 4, Somagiri Place,*
*Colombo - 06.*
*Sri Lanka.*
*Tel : 2360406*
*Tel : 0779008286*


**நாணாமை நாடாமை நார்இன்மை யாதுஒன்றும்**
**பேணாமை பேதை தொழில்** 833

வெட்கப்பட வேண்டிய செயல்களுக்கு வெட்கப்படாமையும், ஆராய்ந்து பார்க்க வேண்டியவற்றை ஆராய்ந்து பாராமையும் எவரிடத்தும் அன்பில்லாமையும், பேணிக் காக்க வேண்டிய எதையும் பேணாமையும், பேதை செயல்களாம்.

# அருளிச் செயல்களைப் பிழையின்றிக் கையாளுவோம்

பேரறிஞர். முருகவேபரமநாதன்

சைவ சமயிகளின் இருகண் பாவைகள் தமிழும் சைவமும்(தான்). திருவே யென்று துவங்கும் நெடுந்தாண்டகத்தில் வாக்யாதிபதி (நாவேந்தர்) கண்ணின் மணியே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்காவாய் (6.47.1) எனப்பாடினார். புரட்சிப் புலவன் பாரதி என் கண்ணிற் பாவையன்றோ - கண்ணம்மா, என்னுயிர்நின்ன தன்றோ" எனப் பாடிய கவிதையின் கருதுகோளை நாம் சிந்திக்க வேண்டும். இந்தக் "கண்ணிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கை கொட்டிச் சிரியா ரோ" என்பதும் பாட்டுக்கு ஒரு புலவனானான பாரதியின் எடுத்துக் காட்டு. அண்மைக் காலத்திலே சைவமும் தமிழும் நிலைதளரக் காண்கின்றோம். இந்நிலைமை வளராமல், தொடராமல் அணை போட வேண்டியவர்கள் சைவப் பெருங்குடி மக்களே. தமிழின் தாயகமான தமிழ் நாட்டிலும் ஈழ மணித் திருவிடத்திலும் தமிழ் விருட்சம் ஈரம் குன்றக் காண்கிறோம். இடம் விட்டுக் கடல் கடந்த நாடுகளில் வதிவோர் - தமிழை மறக்கிறார்கள். பிழை படச் சொல்லேல். மொழி வதற மொழி என்கிறார் அவ்வை. யாழ்ப்பாணத் தமிழ் இலக்கணச் சுத்தமானது, பேச்சும் எழுத்தும் பேதமில்லாதது. இன்று மொழி வளம் குன்றுவதோடு பேச்சும் எழுத்தும் பிழை மலிந்து காணப்படுகின்றது. நக்கீரர் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமேயென்று அடித்துச் சொன்னார். சாத்தனார் புலவர்கள் விடும் பிழைக்குப் பொறாராகித்தன் தலையிலே எழுத்தாணியால் குத்துவாராம். எமது மண்ணிலே கீழைப் புலோலி (இலக்கணச் சொண்டர்) குமார சுவாமிப் புலவர் பிழையாகத் தமிழை எழுது பவர்களுடனும், பேசுபவர்களுடனும் கதைக்க மாட்டாராம். நல்லாபுரி ஆறுமுக நாவலர் நல்ல நல்ல நூல்களை ஆக்கிப் பிழையின்றி அச்சுவாகனமேற்றிச் சுத்த பதிப்பாக வெளி யிட்டார். அவர் வெளியிட்ட நூல்களிற் பிழை திருத்தம் போடவில்லை. இத்துறையிலே உவே சுவாமி நாதையர், சி. வை. தாமோதரம்பிள்ளை போன்றோர் முன் மாதிரியாக இருந்தனர். இன்று பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் செம்பதிப்புக்களை வெளியிட்டு வருகிறார்.

அண்மைக் காலத்திலே ஒரு அடங்கன் முறை வாங்கினேன். அதிலே பிழைதிருத்தம் மலிந்திருந்தது. ஆறாம் திருமுறை வெளியீ டொன்றிலும் கடைசியிற் பிழைதிருத்தம் போடப்பட்டிருந்தது. டி. கேசியின் கம்பர் தரும் இராமாயணத்திலும் பிழைதிருத்தம் நிறையக் காணப்பட்டது. இ∴து கவலைக்குரிய விடயம். இ∴தே போல சைவத் தோத்திரங்களை ஆலயங்களில் ஓதுவோர் பிழை பிழையாக ஓதக் காணலாம். இந்நோய் நினைவு மலர் களிலும் தொற்றிக் கொண்டது. பாராயணப் பாமாலை, திருமுறைத் தொகுப்புக்கள் எல்லாமே பிழை மலிந்தனவாக வெளியிடப் படுகின்றன. சமய சங்கங்கள், ஆதீனகர்த் தாக்கள், வெளியீட்டாளர்கள், சமய சஞ்சிகை கள் மெய்ப்புப் பார்ப்போர், தொகுப்பாசிரியர் போன்றோர் இதை அவதானித்துப் பிழையின்றி நூல்களை வெளியிடல் இன்றைய தேவையாம். பிழையான வெளியீடுகளால் படிப்போர்

**ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்**
**பேதையின் பேதையார் இல்** **834**

அடங்கி நடப்பதற்கு ஏதுவான அறநூல்களைக் கற்று அவற்றின் பொருளையும் பயனையும் தெளிவாக உணர்ந்தும், அவற்றைப் பிறருக்கு விளங்குமாறு எடுத்துச் சொல்லியும், தான் அவற்றின்படி அடங்கி நடக்காத பேதைப் போலப் பேதையார் உலகத்தில் இல்லை.

பாராயணம் செய்வோரும் பிழையாகவே படிப்பர். இத்தேக்க நிலை தமிழையும், சைவ சமயத்தையும், சமூகத்தையும் பிழையான பாதைக்கு ஆற்றுப் படுத்துவதாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், பட்டினத்துப் பிள்ளையும் பிழை பற்றிப் பேசியுள்ளனர்.

**அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்**
**அதுவும் நான்படப் பாலதொன் றானால்**
**பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்,**
**பிழைப்பன் ஆகிலும் திருவடி பிழையேன்**
**வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்**
**மற்று நான்அறியேன் மறு மாற்றம்.** 7.61.1

**பொன்னும் மெய்ப்பொருளுந்தரு வானைப்**
**போக மும்திரு வும்புணர்ப் பானைப்**
**பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்**
**பிழையெ லாந்தவிரப்பணிப் பானை** 7.59.1

**கல்லாப் பிழையுங் கருதாப் பிழையும் கசிந்துருகி**
**நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்**
**அஞ்செழுத்தைச்**
**சொல்லாப் பிழையும் தொழாப் பிழையும் துதியாப்**
**பிழையும்**
**எல்லாப் பிழையும் பொறுத் தருள்வாய்**
**கச்சிஏகம்பனே**
பட்டினத்தடிகள்.

எந்தக் காரியத்தையும் வழுவின்றிப் பிழையின்றி செய்நேர்த்தியாய், கைநேர்த்தியாய்ச் செய்யப் பழகவேண்டும். பிழை பிழையாகச் செய்தால் அது பிழை பிழையாகவே வரும். எனவே தசாரமான, மந்திர வடிவான திருமுறைகளைப் பாராயணம் பண்ணும் போதும் மனனஞ் செய்யும்போதும் பாடமாக்கும் வேளையிலும் பிழையின்றிப் பாடம் செய்தல் முக்கியமாம். பிழையாகப் பாடமாக்கிய பாக்களைத் தெய்வ சந்நிதானத்திற் பாடுவதைத் தவிர்ப்பது உசிதம். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப் புராணம், என்பன பஞ்சபுராணத்துள் அமையும். திருப்புராணம் பன்னிரண்டாந் திருமுறையான பெரிய புராணத்தில் இருந்தே ஓத வேண்டு மென்ற கட்டுப்பாட்டை மீறி, ஏனைய புராணங்களான கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கோயில் புராணம் என்பவற்றிலிருந்து எடுத்தோதுவது முறை சாராச் செயல் என்பதை மனதிற் கொளல் மேலாம். ஓத முன்னரும் ஈற்றிலும் திருச்சிற்றம்பலம் சொல்லல் அதிமுக்கியம். திருப்புகழ் பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்தது. தென்னகத்தில் அ∴து ஓதும் வழக்கமில்லை. இலங்கையிற் பாடல் பெற்ற தலமான திருக்கேதீசுவரத்தில் சிவசந்நிதானத்தில் ஓதுவதில்லை. முருக சந்நிதானத்தில் ஓதுவர். அருட்பாவும் அங்கீகாரம் பெறாத பாடல். திருவாசகத்துக்கும் தேவாரத்துக்கும் வேறுபாடு கண்டு ஓதல் முறையாம். சிலர் திருவாசகப் பாடல் சிலவற்றைத் தேவாரமெனப் பிழையாக விளங்கி ஓதுவர். திருமுறை பாராயணஞ் செய்வோர் பிழையின்றியும், பக்தியோடு கூடிய பண்ணோடும், பணிவோடும், கூட்டாமலும் குறைக்காமலும், மாற்றாமலும், பிறழாமலும், திருத்தாமலும் ஓதுதல் சாலவும் நன்று.

பதினோராந் திருமுறைப் பாடல்களைக் கலப்படஞ் செய்தல் குற்றம். பூசகரும் வெவ்வேறு தெய்வங்கட்குப் படிக்கும்படி கேட்பர். எல்லாம் ஒன்றே. ஒன்றுதான் தெய்வம் இரண்டாவது இல்லை. ஐயப்பனுக்கும் திருமுறைக்கும் என்ன தொடர்பு எனப் புரியவில்லை.

ஆக பஞ்சபுராணம் பிழையின்றி ஓதப்படல் முக்கியம். பன்னிரு திருமுறை முற்றோதுவோர், திருவாசகமுற்றோதுவோரும் இதில்

அதிக கவனஞ் செலுத்தல் பிரதானம். திருமுறையோதும் போது தேநீர் அருந்தினால் வாய் அலம்பிய பின்னரே பாராயப் பனுவலை ஓதல் கட்டாயம். சினகரங்களிற் திராவிட கானம் ஓதும் சிலர் நூலை வைத்தும் படிக்கும் போதே தப்பும் தவறுமாய்ப் படிப்பதும் உண்டு. பிழைபட ஓதும் சந்தர்ப்பங்களை இப்பந்தியிலே தொட்டுக் காட்டுதல் பயன்தர செயலாம். உதாரணமாகச் சில:-
பெரியபுராணக் காப்பான 'உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்" எனப் படிப்பது குற்றமாம். இ∴தே போல வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க என்ற வாழ்த்தின் நான்காமடி மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் என்றிருக்கச் சிலர் உலகமெலாம் என ஓதுவர். இது தவிர்க்கப்பட வேண்டும். திருப்பல்லாண்டிலே,

**பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்**
**பாற்கடல் ஈந்த பிரான்**
**மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்**
**மன்னிய தில்லை தன்னுள்**
**ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்**
**பலமே இடமாகப்**
**பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே**
**பல்லாண்டு கூறுதுமே.**

எனவரும் பாடலிலே அமைந்த "சிற்றம் பலமே இடமாக" என்ற தொடரோடு திரு என்பதைக் கூட்டி திருச்சிற்றம்பலம் எனப் படிப்பவர்களும் இருக்கிறார்கள். பல்லாண்டு கூறுதுமே என்பதற்குப் பதிலாக கூறிடுமே என்று கூறுவாரும் உள்ர். திருவாசகத்திற்கு பாரொடு விண்ணாய் எனத் துவங்கும் (வாழாப் பத்து) பாடலின் இறுதிவரி "வருக என்றருள் புரியாயே" என்பது சிலர் இதை வருக வருக என்றருள் புரியாயே என தம்மிஷ்டத்துக்கு மாற்றிக் கொள்வர். திருவாசகத்தில் எல்லார் நெஞ்சையும் உருக்கும் பாடல் இது.

**கடைய வனேனைக் கருணையி னாற்கலந்**
**தாண்டு கொண்ட**
**விடைய வனே விட்டிடுதி கண்டாய்**
நீத்தல் விண்ணப்பம்.

இதிலே கடையவனே - என்பது கடைய வனாகிய என்னை என்ற பொருள்படும். கடையவன் + என்னை = கடைபவனேனை. என்னை என்பது எனை யெனவரும் கடைய வனாகிய என்னை என்று குறிப்பிடுகிறார். மணி மொழியார் - அதைக் கடையவனே! என விளித்து (பிரித்துப்) படிப்பிக்கும் சில சமயத்தார் சிவனையே கடைய வருக என்று மாற்றி விடுகிறார்கள். இமயம் போன்ற தவறு இது இனியாகிலும் மாற்றிப் பொருளுணர்ந்து பாடுவோம். சிவபுராணத்திலும் பொருள் பொதிந்த வரிகளைத் தொடர் களைப் பதங்களை மாற்றி மாறாடுவர்.

**மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே**
சிவபுராணம் 45

**மாற்றம் சொல் வார்த்தை** (மாற்றமனம் - பிழை)

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோன் - சொல்லும் மனமும் கடந்து நின்ற வேதப் பொருளாய் உள்ளோன். சொல்லுகைக்கு இல்லாதவன் சொல்லுக் கெட்டாதவன். வார்த்தையுள் அகப் படாதவனென்ற செம் பொருளை மாற்றி மாற்ற எனப் பாடுவதும் ஏற்றுக் கொள்ள முடியாததே. அம்மட்டன்றி நமச்சிவாய வாஅழ்க என்பதையே விழுங்கி நமச்சிவாய வாழ்க என இசைத்தல் குற்றமே.

**இன்னும் வரும்........**

**பொய்படும் ஒன்றோ புனைபூணும் கைஅறியாப்**
**பேதை வினைமேற் கொளின் 836**

செய்யும் வகை அறியாத பேதை ஒரு செயலை ஏற்றுச் செய்தால் அது தவறு படுதல் மட்டுமன்றி அவனும் குற்றவாளியாகி விலங்கு பூணுதலும் நிகழும்.

# ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர (வயல்) விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் - ஆய்வு

ப. பரந்தாமன்

வடமேல் மாகாணத்தில் சிலாப நகருக்குக் கிழக்குத் திசையில் அமைந்துள்ள ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர (வயல்) விநாயகர் கோயிலின் மகா கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள கும்பாபிஷேக மலர் பல்வேறு வழிவகைகளில் தனித்துவமும், சிறப்பும் வாய்ந்ததாக அமைகிறது. இக் கோயிலின் மகா கும்பாபிஷேக தினத்தன்றே இம் மலர் வெளியிடப்பட்டுள்ளதோடு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று தேசிய மொழிகளிலும் இம் மலரில் ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. விநாயகரின் 32 வடிவங்களை மட்டுமே தாங்கியவாறு, வேறு எவருடைய படங்களையோ, விளம்பரங்களையோ கொண்டிராமல் இம்மலர் முழுவதும் பயனுள்ள ஆக்கங்களுக்காக மட்டுமே ஒதுக்கியுள்ளமை பாராட்டத் தக்க அம்சமாகும்.

பல்வேறு பயனுள்ள தகவல்களையும், பலதரப்பட்ட அரிய தரவுகளையும், பட்டியல்களையும் உயர்ந்த மாணர்வகளுக்கும் மற்றும் ஆய்வாளர்களுக்கும் பயன்படக்கூடிய பல உயர்தரத்திலான ஆராய்ச்சியிக் கட்டுரைகளையும் இம்மலர் உள்ளடக்கியுள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும். இம் மலரில் முதல் கட்டுரையில் ஷேத்திர விநாயகர் ஆலயத்தின் வரலாறு மிகமிகச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

வடிவாம்பிகா சமேத முன்ன நாத சுவாமி கோயிலுக்கும் இந்த ஷேத்திர விநாயகர் கோயிலுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய தகவல்கள் மென்மேலும் ஆராய்ச்சிகளும் ஆய்வுகளும் நடைபெறுவதற்கு அடிகோலுவதாக அமைகிறது. யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்தைப் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணன் ஐயர் எழுதியுள்ள "காலந்தோறும் விநாயகர் வழிபாடு" என்ற தலைப்பிலான கட்டுரை விநாயகர் பற்றிய வரலாற்றாதாரங்களுடன் உரிய அடிக் குறிப்புகளுடனும் காணப்படுவதால் இவ்வாக்கம் இந்து நாகரிக பாடத்தை உயர் தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு விருந்தாக அமைகிறது. சிவபுராணம், மக்க புராணம், வராக புராணம், கந்தபுராணம், சுப்ர பேதகமம், விநாயகர் அகவல், திருவதிகை, ஹ்ருதய அனுபூதி மந்திரம், மகாக்கிரமணிராட்டிய சாஸ்திரம் போன்ற மூல நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

தமிழ் மொழியின் இலக்கணத்துக்கும் விநாயகர் தத்துவங்களில் உள்ள தொடர்பை கொழும்பு மௌனாஸ்ரமத் தலைவர் ஸ்ரீ உமாசங்கர் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரை விபரமாகத் தருகின்றது. வேதாகம ஜோதி கிரியா கலாமணி என்ற பட்டங்களைக் கொண்ட மட்டுவில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் பௌராணிக மரபின் அடிப்படையில் விநாயகர் வழிபாடு பற்றி மிக விரிவாக விளக்கிக் காட்டியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் சமீபத்தில் நடாத்திய ஆய்வுகளின் அடிப்படையில் சாசங்கள் பற்றிய ஆராய்ச்சிகளின் முடிவுகளை விளக்கிக் காட்டியுள்ளார்.

"விநாயகர் வழிபாட்டின் தொன்மை" என்ற தலைப்பிலான கட்டுரையில் யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை முதுநிலைப் பேராசிரியா சி. க. சிற்றம்பலம் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் பல்வேறு உசாத்துணைகளின் அடிப்படைச் சான்றாதாரங்களுடன் விநாயக வழிபாட்டின் தொன்மையை நிறுவியுள்ளார்.

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை 837

பேதையானவன் விதி வசத்தால் பெரும் செல்வம் பெற்ற போது தன்னோடு ஒரு தொடர்பும் இல்லாத அயலவர் எல்லா நன்மையும் பெற தன் சுற்றத்தார் உண்ணுவதற்கும் இல்லாமல் பசியோடு இருப்பர்.

யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா,"இந்து மத வழிபாட்டில் அக்கினியின் (வேள்வி ஹோமம்) முக்கியத்துவத்தை கிரியா மரபு ரீதியிலான அடிப்படையில் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தமிழ் மணி மயிலங்கூடலூர் புலவர் த. கனகரத்தினம் திருமால் வழிபாட்டு முறையை சிங்கள இலக்கியங்களின் அடிப்படையிலான தரவுகளைக் கொண்டு விளக்கமாக எழுதியுள்ளார்.

ஒரு கோயில் கும்பாபிஷேகத்தின் நடை முறைகள் ஒழுங்குப் படி நிலைகள் போன்ற வற்றை அவற்றின் தத்துவார்த்த அடிப்படையில் விஞ்ஞான பூர்வமாக ஆகமப் பிரவீணர் சாகித்திய சிரோண்மணி போன்ற பட்டங்க ளைக் கொண்டு அண்ணா மலைப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற ந. லக்ஷ்மி நாராயண சர்மா குடமுழுக்கு எனப்படும் கும்பாபிஷேகம் என்ற தலைப்பிலான கட்டுரையில் தெளிவாக இலகு தமிழ் மொழி நடையில் விளக்கியுள் ளமை போற்றுதற்குரியது.

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமான வேதாகமமணி சேர். ரவிச்சந்திரக் குருக்கள், விநாயகர் உருவத்தின் தத்துவார்த்த சிந்தனைகளை மிக விரிவாக மானவ கிரிஹிய சூத்திரம் யக்ஞ வாக்கிய ஸ்மிருதி, காண பத்திய அதர்வ சீர்ஷம், பத்ம புராணம், ஸ்ரீ தத்துவ நிதி மந்திரமகோநதி, மந்திர ரத்தனா கரம், சில்பரத்தினம், அம்சுமத் போதாகமம், சுப்ர பேதாகமம், பிரம்ம புராணம், புறநானூறு போன்ற மூல நூல்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கோள் காட்டி எழுதியுள்ளார்.

இவற்றைத் தவிர விநாயக வழிபாடு, இந்துமத வழிபாட்டு முறையில் தனித்துவம் மிக்க விநாயகர், விநாயகர் பெருமை, சமய தத்துவ சிந்தனை மரபில் கும்பாபிஷேக விநாயகர் கோல விநாயகர், விநாயக ஆலய விளக்குகள், ஆலயங்களில் வகை வகையான பிரசாதங்கள், சூரிய கதிர் விழும் சூரிய பூஜை, சிறப்பு அம்சங்களுடைய கோலங்கள், அறுகம் புல், துளசித் தீர்த்தம், நந்தியின் பல்வேறு கோலங்கள், விநாயகர் வழிபாடும் விசேட தினங்களும் போன்ற கட்டுரைகள் மிகவும் உயர் தரத்தில் அமைந்து பல்வேறு அரிய விடயங்களைக் கொண்டுள்ளன.

கும்பாபிஷேக வைபவம் தொடர்பான முக்கிய தரவுகள், இலங்கையில் உள்ள விநாயகர் ஆலயங்களின் பெயர்கள், பெருமை வாய்ந்த 108 விநாயகர் தலங்கள் விநாயக புராணம் கூறும் 56 அவதார கணபதி திருவுருவங்கள், 64 பைரவர் கோலங்கள், 64 சிவமூர்த்தங்கள் பூஜை வழிபாட்டில் பயன்படும் பழங்களின் தாயகமும் அவற்றின் தாவரவியல் பெயர்களும், சிவனருள் பெற்ற செம்மல்கள், சிறப்பான தல விருட்சங்கள் உள்ள தலங்கள் போன்ற விடயங்களைக் கொண்ட தரவுகள் மிகவும் பயனுடையவையாகும்.

இடங்கள் தோறும் விநாயகர் வழிபாடு என்ற விடயத்தைத் தாங்கிய கட்டுரை மிகவும் பயனுடையதாக அமைவதோடு பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வாய்ப்பையும் தூண்டுதலையும் அளிப்பதாக உள்ளது. 15 பக்கங்கள் கொண்ட இக் கட்டுரையே இம் மலரின் சித்ரமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

32 விநாயகர் அம்சங்களைக் கொண்ட வர்ணப்படங்கள் உள்ளடக்கிய இம் மலரில் உள்ள சிங்கள, ஆங்கில, மொழி மூலக் கட்டுரைகளும் மிகவும் உயர் தரத்திலானவையாகக் காணப்படுகின்றன. சிங்கள மொழியில் இந்து சமயத்தைப் பற்றிய நூல்கள் குறைவாக உள்ள இக் காலகட்டத்தில் இம் மலரில் உள்ள கட்டுரைகள் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன.

**மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்**
**கைஒன்று உடைமை பெறின்** 838

பேதையானவன் தன்கையில் ஒரு பொருளை உடைமையாகப் பெற்றால் அது ஏற்கனவே பித்துக் கொள்ளியான ஒருவன், அதன் மேலும் கள்ளுண்டு மயங்கினால் போன்றதாகும்.

# சமயமும் வாழ்க்கையும்

யாழ் நாச்சிமார் கோவிலடி, சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். ஆகவே மனிதப் பிறவி ஒரு புனிதப் பிறவி. இந்த மனிதப் பிறவியை எடுத்த நாங்கள் அதன் மகிமையையும் புனிதத் தன்மையையும் மனத்திலே நினைத்து உணர்ந்து செயற்பட வேண்டும். மனிதப் பிறவியைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் முதலில் மனித நேயத்தைப் புரிந்து மனிதனாக வாழப் பழகுதல் வேண்டும். மனிதன் மனித னாக வாழ்வது மிகவும் முக்கியம். மனிதர்கள் மிருகமாக வாழ்தல் கூடவே கூடாது. "வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தி தொழுதல்" நமது கடமையாகும்.

மேலும் எம்முடைய வாழ்க்கையானது சமயத்தை அடிப்படையாகக் கொண்டது. நமது வாழ்வு சமயப் பண்பிலே ஊறி நிறைந்து வளர்ந்து வளம் பெற்றது. வாழ்க்கை என்னும் ஓடம் மிதந்து வருகின்ற வாழ்க்கைக் கடலிலே வீசும் துன்பத்தைத் தரும் காற்றை இனிய இன்பமாக மாற்றிக் கொடுப்பது சமயம். அன்பு கலந்த அற நெறி தழுவிய ஒழுக்கம் நிறைந்த பேரானந்த மயமான இன்பம் நிறைந்த நல் வாழ்க்கையைக் கொடுப்பது சமயம். அந்தத் தகுதி நமது சைவ சமயத்துக்கே உண்டு.

ஒரு மனிதப் பிறவி எடுத்தவன் ஒழுக்கத்தில் சிறந்தவனாக இருத்தல் மிகவும் முக்கியம். சமயச் சார்பற்ற ஒழுக்கம் இந்தப் பூவுலகில் நிலை பெற்றிருத்தல் இயலாது. தனி மனித வாழ்வின் தேவைகள் அதிகரித்துச் செல்கின்ற இன்றைய காலகட்டத்தில் ஒழுக்கம் மிகவும் இன்றியமையாதது. சமய வாழ்க்கை மட்டுமே நல்ல நேர்மையான வாழ்க்கையையும் நீதி நியாயங்கள் நிறைந்த ஒழுக்கத்தையும் தர வல்லது. இஃது முற்றிலும் உண்மை.

எமது சமயத்தின் அடிப்படையே ஒழுக்கத் தில் தான் தங்கியிருக்கின்றது. காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சந்தியாவந்தனம் பார்த்துப் பழகிவிட்டால் அது ஒரு வழக்கத்துக்கே வந்து விடும். அந்த வழக்கமே பழக்கமாகி வாழ்க் கையை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வந்து விடும். நெற்றியில் திருநீறு அணிவதால் முகத்துக்கு ஓர் அழகு வந்து விடுகிறது. அது மாத்திரமன்றி நடுவில் மங்களகரமான மஞ்சள் நிறத்தில் சந்தனப் பொட்டும் செக்கச்செவே லென இரத்தச் சிவப்பில் குங்குமமும் வைத்துவிட்டால் அந்த முகத்தின் அழகே தனி. அதற்கு ஈடு இணை கிடையாது.

இவ்வாறு சமயத்தோடொன்றிய வாழ்க்கையே நமக்கு நன்மைகள் பலவற்றை அள்ளி வழங்குகின்றது. வாழ்க்கையோடு ஒன்றுபட்ட சமயவாழ்வு, நல்ல பயனுள்ளதாக அமைகின்றது. அதாவது இந்த உடம்பு நிலையில்லாதது. ஆராய்ந்து பார்க்கப் போனால் நீர்க் குமிழிக்கு நிகரானது யாக்கை, அழியும் இத்தேகம் நாளைக்கு இருப்பது சந்தேகம்.; ஆனால் இது வெந் தேகம் ஆகவே இந்த உடம்பு நல்ல

நிலையில் இருக்கின்ற போதே நாம் நல்லவற்றைச் செய்து விட வேண்டும்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முது மொழி. ஆகவே நோயுற்றுக் கிடக்காமல் நாம் நல்ல சுக தேகிகளாக வாழ்வதற்கு சமய சம்பிரதாயங்கள், பாரம் பரிய பழக்க வழக்கங்கள் நன்மை பயக்கின் றன. ஒரு குழந்தையானது பிறந்து வளர்ந்து யௌவனமாக வளர்ந்து வாலிபப் பருவ மடைந்து உலகத்தின் சமூகத்தில் காலடி எடுத்து வைக்கின்ற போது படிப்படியாக பல பரிணாம வளர்ச்சிகளைக் கண்டு நிற்கின்றது. அவ்வாறு அது வருவதற்குப் பல சமய நெறிகளைக் கண்டு நிற்கின்றது. அவ்வாறு அது வருவதற்குப் பல சமய நெறிகளே . படிப்படியாகப் பக்குவத்தைக் கொடுத்து நிற்கின்றன. இந்தச் சமய பழக்க வழக்கங்கள் எல்லாமே மனிதனுக்கு ஆரோக்கிய வாழ்வுக்கு அடி கோலி நிற்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஒழுக்கம், உயர்வு, அன்பு, பண்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நேர்மை, நீதி, நியாயம், அடக்கம், பணிவு முதலாந் தன்மைகளைக் கொண்டு விளங்குவதற்கு சமயமே வழிவகுத்துக் கொடுக்கின்றது.

சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்ற நிலை மாறுதல் வேண்டும். சைவ சமயத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் எமது வாழ்க்கையோடு ஒன்றித்தே வருகின்றன. ஒவ்வொன்றும் ஒரு கருத்துடனேயே கையாளப் பட்டு வருவதைக் காணக் கூடியதாக விருக்கின்றது. அந்தச் சமயக் கோட்பாடுகளை யும் தத்துவங்களையும் நோக்குமிடத்து சமயம் வாழ்க்கையுடன் ஒன்று பட்டே இருப்பதை வெளிப்படையாகக் காணலாம். எனவே சமயம் இல்லாமல் வாழ்க்கையும் இல்லை; வாழ்க்கை இல்லாமல் சமயமும் இல்லை.

சமயச் சார்பாகப் பல மன்றங்களும் கழகங்களும் நிலையங்களும் மடங்களும் ஆதீனங்களும் கூடத் தோன்றியுள்ளன. அவை யாவும் சமய வளர்ச்சிக்காகவே பாடு படுகின்றன. இது தவிர, சமய நூல்களும் அச்சேற்றப்பட்டு மக்களிடையே ஒரு விழிப் புணர்ச்சியையும் உண்டு பண்ணியுள்ளது. வாசிப்புப் பழக்கமுடைய பலரும் இந்தச் சமயஞ் சார்ந்த புத்தகங்களை வாங்கிப் படிக்கலாயினர். அதனால் சைவத்தின் தொன்மையும் மேன்மையும் புனிதமும் பற்றி அறிந்து கொண்டார்கள்.

அதுவும் இன்றைய கால கட்டத்தில் சைவத்தின் உயர்வு பற்றிய விளக்கங்கள் பள்ளி மாணவர்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தி விட்டாலும் அதுபற்றி அறிந்து கொள்வதற்கு நிறையச் சந்தர்ப்பங்கள் உண்டு. சைவ சமய பாடம் நன்கு கற்பிக்கப்படுகின்றது. வேத சாஸ்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள் பற்றியெல்லாம் பாட நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவற்றைப் படிப்பதன் மூலம் சமய அறிவு பூரணமாகக் கிடைக்கின்றது என்று சொல்லி விட முடியாது. அதில் கூறப்பட்டுள்ளவற்றை அலசி ஆராய்ந்து உண்மை நிலையை உணர்ந்து கொள்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பாகவும் உள்ளது.

சமய விளக்கம் தெரிந்த அறிஞர்களும், பிரசங்கிகளும் சொற் பொழிவாளர்களும்

தம்மாலியன்றவரை விளக்கங்களைக் கொடுத்து சமய வளர்ச்சியில் தமது பங்கை நல்ல முறையில் வெளிப்படுத்துகின்றனர்.

இப்போது பிறந்த நாள் நிகழ்வு முதல் திருமணம் போன்ற பல நிகழ்வுகளிலும் சமயச் சடங்குகளும், சமயச் சம்பிரதாயங்களும் நன்கு வேரூன்றி விட்டன. ஒவ்வொரு காரியமும் சமயஞ் சார்ந்ததாகவே இருப்பதனால் தட்டிக் கழிக்க முடியாமல் தாமாகவே உணர்ந்து செயற்படும் நிலையில் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். உண்மைச் சமய வாழ்வு பின்பற்றப்படுவதனால் அது தானாகவே வளர்ச்சி கண்டது.

சமய வாழ்க்கையின் மூலமே பண்பாடு, பழக்க வழக்கங்கள், பெரியோரைக் கனம் பண்ணுதல் முதலியனவும் வளர்ச்சியடைகின்றன. இப்போது ஈழ வள நாட்டிலே சைவ சமய வளர்ச்சியில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டுள்ளது. சமயச் சார்பற்ற வாழ்க்கை சாரமற்ற வாழ்க்கை என்று மக்கள் நம்புகின்றனர். வாழ்வியலோடு ஒன்றுபட்ட சமய வாழ்வையே பலரும் விரும்புகின்ற வேட்கையும் வளர்ந்துள்ளது. சைவ ஆலயங்கள் தோறும் தேவார திருவாசகங்கள் பண்ணிசையாக ஒலிக்கத் தொடங்கின. மேடைகளின் சைவ சமயச் சொற்பொழிவும் பிரசங்கமும் நடைபெறத் துவங்கி விட்டன. நாளும் பொழுதும் சைவம் பற்றியே பேச்சுக்கள் முழங்கின. சமயத்தின் பேரால் சாதி சமய வேறுபாடுகளும் நீங்கி விட்டன. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று எல்லோரும் செயற்படலாயினர். இதுவே சந்தோஷமான சுபிட்சமான வாழ்வு.

இதனால் எமது நாடு நல்ல முன்னேற்றம் கண்டது. ஒவ்வொரு வீட்டிலும் தமிழ் மறை திருமுறையால் ஒலித்தது. எல்லோரும் நெற்றியில் நீறணிந்து சைவப் பண்பாட்டுடன் வளைய வரலாயினர். சைவத்தின் மேற்கொண்ட பற்றினால் தாமாகவே விரும்பிச் சைவ வாழ்க்கையை வாழத் தொடங்கி விட்டனர். எங்கு பார்த்தாலும் சைவத்தின் முழக்கம். மூலை முடுக்கெல்லாம் சைவ ஆலயங்கள், ஒலிபெருக்கிகள் சைவத் திருமுறையையே ஒலிபரப்பின. சைவத்தின் மரபு பேணிப் பாதுகாக்கப்பட்டது. மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டது போன்று அவர்களுடைய செயற்பாடுகள் சமயஞ் சார்ந்ததாகவே நிகழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் சைவப் பெரியார்கள் இந்த நிலை கண்டு மனத்திலே நல்ல மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் இது தொடர்ச்சியாக நடைபெற்றால் தானே அந்த மகிழ்ச்சி நிலைத்து நீடித்திருப்பதற்கு எங்கிருந்தோ வந்த ஒரு சாத்தான் "கடவுளும் இல்லை தெய்வமும் இல்லை எல்லாம் வெறும் பொய்" என்று கூறி நமது நாட்டையே குட்டிச் சுவராக்கி விட்டது. மாணவ சமுதாயம் நிலை தடுமாறி விட்டது. பெற்றோர்களும் என்ன செய்வதென்று அறியாமல் தத்தளிக்கின்றனர். இன்றைய இளைஞர்களும் யுவதிகளும் சமய சம்பிரதாயங்களை ஏற்க மறுக்கின்றனர். இதற்கு யார் பொறுப்பு?

இந்த நிலை மாற வேண்டும். எல்லோரும் ஓரினம் நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்ற நிலைமையை உருவாக வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அனைவரும் உண்மை நிலையை உணர்ந்து 'கடவுள் இருக்கின்றார்' என்று நம்பி வழிபாட்டு முறைகளில் ஈடுபட வேண்டும். முழுதான நம்பிக்கையுடன் கும்பிட வேண்டும். செய்வார்களா?

# பொது மக்கள் சைவம்

சு. சிவபாதசுந்தரம்

சைவ சாஸ்திரங்களின் பொருள் விளக்கம் பற்றிய சிந்தனை எதுவுமற்ற சைவசமூகத்துச் சாமானியரின் சமயம் பொது மக்கள் சைவமாகும். அவர்களின் சமய அறிவு புராணக் கதைகளும் தம்மத்தியில் நிலவும் சமய நம்பிக்கைகளுஞ் சார்ந்த அளவினதாக வேயிருக்கும். அவர்கள் சிவன், தேவதைகள், மனிதர், இராட்சதர், பேய்கள் எனும் எல்லாவற் றையும் வழிபடுவோராவர். அவருட் பலர் திருநீறணிவர். ஆலய வழிபாடாற்றுவர். விரதங்களனுட்டிப்பர். அவர்களுக்குக் கடவுள் பற்றிய கருத்து, படைத்தற் கடவுளாகிய சிவன் முதல் கடவுட் பொம்மைகள் வரை பல இலக்குகளிற் பற்றியிருக்கும். இவருள் அநேகர் உலகியல் வாழ்க்கை நிகழ்வுகள் தமது மண்டையோட்டில் எழுதப்பட்டபடி நடப்பன எனக் கருதுகிறார்கள். மரணத்தின் பின் பிறப்புண்டென அவர்கள் நம்புகிறார்கள். அது காரணமாக மரணத்துக்குப் பின் நடந்தாக வேண்டுங் கிரியைகளில் ஆவலுள்ளோராயிருக் கின்றனர். பல்வேறு சகுனங்கள் நிமித்தங்கள், பல்லி சொல்லுதல் என்பவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். பல்லி சொல்லுதல் கேட்டு மிக இன்றியமையாத அலுவல்கள் கூட அவர்களாற் கைவிடப்படுகின்றன. அவர்கள் சோதிட சாஸ்திர பக்தர்களாயிருந்து எல்லை யற்ற துன்பங்களுக்கும் ஆளாகின்றார்கள்.

இவ்வித சாமானிய சைவர்களின் அதிர்ஷ்டக் கேடு யாதெனில் அவர்கள் சைவவியலை அறியாதிருப்பதாகும். தன்போல்வார் சொல்வ தையுஞ் செய்வதையுமே தானுங் கடைப்பிடிப்ப தாகச் சொல்லுபவன் மந்தைச் சுபாவமுள்ள வன் புதிது ஒவ்வொன்றாலும் அவன் ஈர்க்கப்படுகின்றான். தவற்றிலிருந்து சரியைப் பிரித்தறிய உகந்தவழி எதுவும் அவனறியான்.

தமிழகத்தில் வெவ்வேறான இரு சமயங்கள் ஒரு காலத்தில் இருந்தன. கலாச்சார பண்பாடுள்ளோரால் தழுவப்பட்ட சைவம் அவற்றில் ஒன்று மனித வழிபாடும் பசாசு வழிபாடும் இணைந்த ஒன்று மற்றையதாகும். அண்ணமார், நாச்சிமார் என்போர் சமூகத்தில் உயர்தரத்திலிருந்த மனிதர். அவர்கள் வாழுங் காலத்தில் அவர்கள் ஆதிக்கத்திலிருந்தோராற் போற்றப்பட்டு மரித்தபின் தெய்வ பாவனையில் வழிபடப் பெற்றவர்கள். காத்தவராயர் அசுரனா யிருந்த ஒருவர். மாடன், கறுப்பன் , பெரிய தம்பிரான் என்போர் பசாசுகள். பண்பாடுறாத மக்கட் குழுவினரால் வழிபடப் பெறும் வைரவர் ஒரு படைப்பு. காளி என்ற வடிவும் இவர்களால் வழிபடப்படுகின்றது. இவையாவுஞ் சைவ எல்லைக்குப் புறம்பானவை. காலகதியில் இவ்விரு வகையினரும் ஒன்றிக் கலந்து விட்டனர். அதன் விளைவாக பண்பாட்டு மலர்ச்சியுள்ளார் தொகுதியில் அறிவின ராயிருக்க நேர்ந்துள்ளோரும் பண்பாடற்றோர் தொகுதியில் அதிர்ஷ்டமுள்ளோரும் (இதாகித மறியாது) சிவ வழிபாடு, மனித வழிபாடு எல்லாம் நிகழ்த்துவாராயினர்.

இத்தகையினரால் வழிபடப்படும் மூன்று இன்றுமுள. அவற்றுள் ஒன்று மேரி. வட இலங்கையில் உரோமன் கத்தோலிக்கராற் புனிதத் தலமெனக் கருதப்படும் மடுமாதா கோயிலில் உள்ளது அது. மற்றையது. இஸ்லாமியரின் பெருமதிப்புக்குள்ளாயிருக்கும் மீரா. இது தென் கிழக்கிந்தியாவில் நாகூரில் உள்ளது. அவற்றில் நிகழும் வழிபாடு சொல்வார் சொல்வழிப் பிறந்த நம்பிக்கையிற் கால் கொண்டது. அதன் விருத்தி பணம் பெருக்கும் ஆர்வ விருத்தியை உட்கொண்டது. அதுவே அவ்விடங்களில் நிகழும் வழிபாட்டின் இலக்கணமுமாம். சைவ சமயத்தவரொருவர் நோய்வாய்ப்பட்டிருக்கையில், குறித்த தலங்க ளிரண்டில் ஒன்றுக்கு அன்பு பூண்டிருந்த உறவி னரொருவர், நோய் தீர்ந்து குணமடைந்த தாகக் குறித்த அத்தலத்துக்கு நன்கொடைய

ளிப்பதாக நேர்த்தி பண்ணும்படி நோயாளிக்கு ஆலோசனை கூறுவார். நோயாளியும் அங்கு பல அதிசயங்கள் நிகழ்ந்ததாகப் புனையப்பட்ட செய்திகளை முன்பு கேட்டிருந்தவராதலின், ஆலோசனைக்கியைந்து நேர்த்தி பண்ணிக் கொள்கின்றார். நோய் தீர்ந்ததும் தனது சுற்றமித்திரர் சகிதம் அவர் அத்தலத்துக்கு யாத்திரை பண்ணுகிறார். சுற்ற மித்திரரும் தம்மவர் ஒருவர் நோய்வாய்ப்படும்போது அத்தலத்து மகிமையை மனங் கொள்கின்றனர். உண்மையில் இது சார்பான நிகழ்தகவு யாதெனில்:- மனிதனொருவன் தன் வாழ்நாளில் பட்டுத்தரிக்கவுள்ள பல்வேறு நோய்களில் மரணம் விளைக்கும் இறுதி நோய் தவிர மற்றெல்லாவற்றிலிருந்தும் மீளுவது சகஜம். ஆகையால், அத்தெய்வங்களுக்கு நோயாளி எவ்வித நேர்த்தியுஞ் செய்யாதிருப்பினுங் கூட அவன் நோயிலிருந்து மீட்சி பெற்றேயிருப்பான்- என்பதாம்.

சைவத்துக்குப் புறம்பானதாயுள்ள மூன்றாவதான ஒன்றின் வழிபாடு பழைய சிங்கள மன்னன் ஒருவனால் இலங்கை முழுவதிலும் அதிகாரபூர்வமாக விதிக்கப்பட்டிருக்கிறது. அது கண்ணகி எனப்படும். அக்கண்ணகி பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்களில் நமது சமயத்தவர்கள் பூசாரிகளாக வந்திருக்காத பட்சத்தில் அவ்வழிபாட்டை விதித்த மன்னன் இறந்த கையோடே அவ்வழிபாடு கைவிடப்பட்டிருக்கும். கண்ணகியின் தெய்வத்தன்மை பற்றிய நம்பிக்கை சரித்திரம் எழுதுவோராற் புனையப் பெற்ற பொய்க்கதை மூலம் மேலும் அதிகரிப்பதாயிற்று. கண்ணகி தேவதை யொன்றின் அவதாரமென்பது அப்பொய். கண்ணகி வரலாற்றை அதன் நூலாகிய சிலப் பதிகாரத்தில் வாசிப்போர் அவள் பற்றிய அவதாரப் புனைவை ஒத்துக் கொண்டாக வேண்டு மெனற்கில்லை.

கண்ணகி தன் கணவனுக்கு அரசன் கொலைத் தண்டனை விதித்தது அநீதியென அவனெதிரில் நிருபித்தபோது, அரசன் அநீதியை இழைத்துவிட்ட தன் தவற்றுக்காக வருந்தி மூர்ச்சித்து அக்கணமே உயிர் விட்டான் என்பது சிலப்பதிகாரச் செய்தி மற்றெவ்வரசனாவது தான் அநீதி இழைத்து விட்டமை மாத்திரத்திற்காகத் தானாக உயிரிழந்த செய்தி மற்றைச் சரித்திரத்திலேனும் கதையிலேனுங் காணப்பட்டதில்லை.

நீதி வளாகத்தில் அவன் அரசர்க்கரசனாவான். எனது வாசகரே! நீர் கண்ணகியாயிருந் திருந்தால், உமது கணவன் விஷயத்தில் அநீதியாளனாக இருந்து விட்ட ஓரே ஒரு சிந்தனைத்துயர் தாங்கமாட்டாமல் ஒரு அரசன் தானாக உயிரிழப்பதை நீர் காணுகையில் உமது உணர்ச்சி என்னவாயிருந்திருக்கும்! பெருந்தன்மை வாய்ந்த அந்த அரசனது பிணம் உம்முன் கிடக்கிறது அதனை உம்முன் காணும்போது உமது உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சி எழுந்திருக்கும்? நீர் அரசன் முன் சென்றபோது உமது கணவனுக்கு அவன் கொலைத்தண்டனை விதித்திருந்தமைக்குத் தகுதியான பதில் தண்டனை அவனுக்கக் கிடைக்கவேண்டும் என்றே எண்ணியிருந்திருப்பீர். மரணத்தினும் பார்க்கப் பெரிய தண்டனை யொன்றுண்டா? அதுவும் சாதாரண ரகத்திலான மரணமன்று. தான் இழைத்த தவற்றுக்காக வருந்தி மூர்ச்சித்து அவன் தானாக உயிர்விட்ட உயர்ரக மரணம் அது. இவ்வளவிலுங் காட்சி முடிந்திலது. தன் கணவனாகிய அரசன் உயிர் துறப்பதை அவனது பட்டத்துராணி காண்கிறாள். அக்காட்சிப் பரிதாபம் அவள் உயிரையும் உண்டு ஏப்பமிட்டு விடுகிறது. மனைவியொருத்தி தன் கணவனுக்குப் பத்திவிசுவாசமாக இருக்கும் பண்பு இதற்கு மேலாக வேறெங்குங் காண இருக்குமா? இங்கே இப்போ இரு பிணங்கள்; இரண்டும் உயர்ரகமான பெருந்தன்மைக் கிலக்கணமாகக் கடவுள் படைத்த இருவரின் பிணங்கள். எனது வாசகரே! நீர் கண்ணகியின் நிலையில் இருந்திருந்தால் என்ன உணர்ந்திருப்பீர்? எதுவாவது நீர் உணர்ந்திருக்கலாம். இங்கோ வெனில் கண்ணகியின் பழிவாங்குந் தாகம் இன்னுமே தணியாமல் நிலைத்திருக்கிறதே

இருந்தும் இச்செய்தி நம்மவரிற் பெருந்தொகை யினரால் வழிவிடப் பெறுகின்றது. அதற்குப் பூசை செய்யப் பூசாரிகளும் ஆயத்தராயிருக் கிறார்கள். இப்பூசாரிகள் அசைவரின் மேலாந்தரம்.

சைவர்களில் அதிகமானோர் விபூதி அணிகின்றனர் அவருள் நகரவாசிகளான சிலர் அதில் ஆவல் கொள்வதில்லை. அவர்களிற் சிலர் அதைத் தயாரிப்பதிலும் பெற்றுப் பேணுதலிலும் ஆம் கஷ்டத்தை ஏற்கத் தயாரில்லை. ஒரு சிலர் சைவரல்லாத தம் மேலதிகாரிகள் முன் செல்லும்போது வெறும் நெற்றியுடன் போதலையே விரும்புமளவுக்கு அதை மதிப்பற்ற பொருளாக்குகின்றனர். சைவச் சிறுவர் சிறுமியர்கள் தீட்சை பெறுதல் கட்டாயம் என்றுணரப்பட்ட காலம் ஒன்றிருந் தது. இப்பொழுது இவ்விதி புறநடை விதியாய் விட்டது. தீட்சை பெறும் ஒரு சிலரும் பஞ்சாட்சரத்தை உணர்வின்றியே செபிப் போராக அல்லது அதைச் செபியாமலே விட்டு விடுபவராக இருக்கிறார்கள். விபூதி அணிதல் பஞ்சாட்சர செபம் பண்ணல் எனுமிவற்றில் நிலவும் வேண்டா வெறுப்பு நிலை இவற்றின் மேலான மகிமை பற்றிய மக்களின் அறியாமையின் விளைவாகும்.

இனி, இச்சாமானிய சைவரின் வழிபாட்டு முறைபற்றிக் கவனிப்போம். விகிதாசாரப்படி அதிகமானோர் கடவுளை நினைக்கின்றார்கள். மிகச் சிலர் தினசரி ஆலயஞ் சென்று வருகின்றனர். குறிப்பிடத்தகும் ஒரு தொகையினர் வாரம் ஒரு தடவை திங்கள் அல்லது வெள்ளிக்கிழமை என்ற நியதிப்படி கோயிலுக்குப் போகிறார்கள். சூழ்நிலை நிர்ப்பந்தத்தாற் கோயிலுக்குப் போவோரே அநேகர். குழந்தை ஒன்று நோய்வாய்ப்பட்டால் அதன் தந்தையோ தாயோ கோயிலுக்குப்போய் அதன் மீட்சிக்காகச் சுவாமியை வேண்டுவர். இவ்வேண்டுதல் மூவிதங்களில் ஒன்றாயமையும் (1) இது ஒரு சாமானிய வேண்டுதலாயிருத்தல் (2) ஒரு விசேட பூசை அல்லது அர்ச்சனை சகிதமான வேண்டுதலாயிருக்கும் (3) வேண்டு தல் நிறைவேறும் பட்சத்தில் சுவாமிக்கு ஒரு நன்கொடை வழங்கும் வாக்குறுதியோடு கூடியதாயிருக்கும்.

வேண்டப்படுபவை கொடுக்கப்பட்டாகும் என்ற நம்பிக்கை காரணமாகவே இவ் வேண்டுதல்கள் செய்யப்படுகின்றன. ஆனால், சில வேளைகளில் தாம் வேண்டுவன கிடைக்கும் மற்றும் வேளைகளில் அவை கிடைக்காமற்போம் என்பது சுய அனுபவத்தின் மூலம் ஒவ்வொருவரும் அறியத்தக்கதாம். தம் வேண்டுதல் கைகூடப் பெறாத பட்சத்தில், நல்லறிவு விளக்கமுள்ளோர், தமது கர்மநிலை தம் பேற்றுக்கு அநுகூலமாயில்லை. விதியை எதனாலும் மாற்றிவிட முடியாது. என்றெண்ணித் திருப்தியுறுவர். ஏனையர் கடவுளிற் குற்றஞ் சுமத்தி அதனில் வெறுப்படைவர். கல்விமான்களிற் சிலர் கூட உலகியல் நலன்களுக்காகக் கடவுளை வேண்டும் பழக்கத்தைப் யதார்த்தப்படுத் துதற்காக அப்பர் சுவாமிகளின், 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்ற அருள் வாக்கை ஆதாரங் காட்டிக் கேட்க வேதனையா யிருக்கின்றது. ஆனால் பெரும்பாலும் வேண்டிக் கொள்ளப்படுவன பெற்றுக் கொள்ளப் படாதிருக்குந் தமது சுய அநுபவத்தின் மூலம் அவர்கள் வேண்டுதல் செய்வதன் பெறுமானத் தைத் தாமாகவே நன்கறிவார்கள். நாஸ்திகர் உட்பட உலக மக்கள் யாவரும் தாம் தாம் விரும்பும் அநேகாநேகம் விஷயங்களைக் கடவுளிடம் வேண்டுதல் செய்யாமலே பெற்றுக் கொண்டிருக்குமாற்றையும் அவர்கள் அறிவார்கள். அன்றியும் அப்பர் அருள்வாக்கு அவர்கள் அதற்குக் கொடுக்கும் பொருளை உண்மையிற் கொண்டுள்ளதாகவில்லை. அதன் யதார்த்தமான விளக்கம் யாதெனில், வழிபடுவோரது உள்ளார்ந்த தேவையைப் பொறுத்து அவருக்கு அந்நேரம் வேண்டிய தாயும் அவர் ஆத்ம ஈடேற்ற நலனுக்கு ஒரு தலையாக உதவக்கூடியதாயும் உள்ள தெதுவோ அதையே கடவுள் கொடுக்கிறார். என்பதாம்.

(அடுத்த இதழில் தொடரும்......)

# உயர்ந்த ஒரு வழி

திருமுருக கிருபானந்தவாரியார்

மனிதர்களாகிய நாம் மனதையுடைவர்கள்; மனம் சித்திக்குங் கருவி; கை செய்யுங் கருவி; அதனால் தெலுங்கில் கை செய்யென்றே வழங்குகின்றது. கால் நடக்குங் கருவி; வாய் பேசுங் கருவி; காது கேட்குங் கருவி; கண் காணுங் கருவி; ஆனால் கண் காண வேண்டியதைக் காணவேண்டும்; காது கேட்க வேண்டிய இனிய அரிய நல்ல கேள்விகளைக் கேட்க வேண்டும்; வாய் உண்மையை இறைவனுடைய அருட் புகழையே பேச வேண்டும். உண்ணுகின்ற வாயை வாய் என்று பெரியோர் கூறுவதில்லை. ஒரு கூடைத் தவிடு, ஒரு படி பருத்திக் கொட்டை, ஒரு கட்டுப் புல் உண்டு ஒரு தொட்டிக் கழுநீரைக் குடிக்கின்ற அகன்ற பெரிய வாயையுடைய மாட்டை வாயில்லாத பிராணி என்கிறோம். அதிகத் தீனியுண்ணுகின்ற யானையும் வாயில்லாத பிராணிதானே. ஆகவே பேச வேண்டியவைகளைப் பேசகின்ற வாயே வாய்.

**'கடியேறு மலரோனைக் கடுஞ்சிறையில் வைத்துப்**
**படியாதி எவ்வுயிரும் படைத்தருளும் பிரானை**
**முடியாத முதலோனை மூவர்பெருமானை**
**வடிவேலன் தனைப் பேசா வாயென்ன வாயே**
**வள்ளி மணாளனைப் பேசா வாயென்ன வாயே!'**

என்று மாயூர புராணத்தில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அவருக்கென்ற உரிய அரிய தமிழ் இன்னுரையால் கூறுகின்றனர்.

கைகளால் தான தருமம் புரியவேண்டும். வறியவர்க்கு உதவி புரிய வேண்டும். நல்ல திருத்தொண்டுகளைக் களையாமல் செய்ய வேண்டும்.; கொடுத்துக் கொடுத்துக் கை நீள வேண்டும்; சிலருக்குக் கை வேறு வகையில் நீளுகின்றது.!

'தருகை நீண்ட தயரதன்' என்று கம்பநாடர் கூறுகின்றார். தசரதனுக்குக் கரம் கொடையினால் நீண்டதாம்.

முருகப் பெருமானுடைய திருவுருவத்தைக் குறிக்க வந்த ஆதிசங்கரர் கூறுகின்றார்.

**'புஜே சௌர்ய தைர்யம் கரே தானதர்மம்'**

முருகனுடைய கரங்களில் தான தருமங்கள் குடியிருக்கின்றன என்பது இதன் பொருள். சீதக்காதி என்ற ஒரு உத்தமனுடைய கரங்கள் ஈந்து சிவந்தனவாம். "ஈந்து சிவந்தது சீதக்காதியின் இரு கரமே" என்பது படிக்காசுப் புலவருடைய வாக்கு. இரண்டு கரங்களாலும் அள்ளித் தருவான் என்பது சிந்தனைக்குரியது. "கரே தஸ்ய க்ருத்யம்" என்கின்றார். மற்றொரு பாடலில், கைகள் ஆண்டவனுடைய பணிகள் புரிய வேண்டும்.

இதுபோல் மனம் நினைக்க வேண்டியதை நினைக்க வேண்டும். நற்சிந்தனையுள்ள மனமே நன்மனம்.

இறைவனுடைய பெருங் கருணையை இடையறாது நினைக்க வேண்டும். அவ்வண்ணம் நினைப்பதன் பயன் யாது? அப்பயனுடைய அளவற்ற கருணையை ஆழமாக நினைக்கும்போது கருங்கல்லினும் திண்ணிய மனம் உருகும். நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகினால் சண்முகன் தஞ்சத்து அருள் புரிவான். "உருகும் அடியவர்

இருவினை இருள் பொரும் உதய தினகர” என்கிறார் அருணகிரிநாதர். ‘உருகும் அடியார் இருவினைத் தொகை யறுக்குமவன்’ என்பது பூதவேதாளவகுப்பு. “ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்” என்றும், “கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும் நலம்” என்றும் கூறுகின்றார் மணிவாசகர்.

இறைவனுடைய கருணையை எண்ணினால் எந்தக் கருங்கல் மனந்தான் உருகாது. உலகிலே சிறிய உதவிகளைச் செய்தவர்களை நினைத்தாலே நெஞ்சம் நெகிழ்கின்றது. இறைவன் தாயினும் சாலக் கருணை புரிகின்றான். தாய் இப்பிறவிக்கு மட்டும் உரியவள்; இறைவன் பிறவிகள் தோறும் தாயாக விளங்குகின்றான். “தொடர்ந்து நின்ற தாயானை” என்கின்றார் அப்பரடிகள்.

இறைவனுடைய கருணை ஆயிரம் ஆயிரம் வகையாக அமைந்திருக்கின்றது. அவற்றுள் ஒன்று இரண்டு நினைவு கூர்வாம்.

இந்த உடம்பை அருமையிலும் அருமையாக ஆக்கித் தந்தனன். இந்த உடம்புக்குள் எத்தனை எத்தனை வகையான நுண்ணிய கருவிகள்! இவற்றையெல்லாம் நாமே படைத்துக் கொள்ள இயலுமா?

நாம் தாய் வயிற்றில் இருந்தபோது நமக்கு இறைவன் உணவு தந்துள்ளான். பெற்ற பின்னர் தாயாய் பால் தருகின்றாள். கருவில் உள்ள குழவிக்கு அவளால் உணவு தர இயலாது.

“கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லுக்குள் தேரைக்கும் விருப்பொடு உணவளிக்கும் ஈசன்” என்கின்றார் ஔவையார்

**ஈயறியாப் பசுந்தேனே எழுத்தறியா**
**மறைப்பொருளே**
**காயறியாச் செழுங்கனிலே கற்பகத்தின்**
**பசுங்கொழுந்தே**
**தாயறியாக் கருவிலிருந் தமுதூட்டுந்**
**தாய்த்துணையே**
**நீயறியாச் செயலுளதோ நிகிலபரம் பரமூர்த்தி!’**

என்பது திரிகூடராசப்பக் கவிராயருடைய தென்றமிழ் வாக்கு.

கருவில் உள்ள குழந்தைக்கு இறைவன் உணவு ஊட்டுவதற்குச் சான்று, பிறந்தவுடன் அக்குழவி கருமையாக மலம் போடுகின்றது. அதைக் காட்டு மலம் என்பார்கள்.

அன்றியும் அக்குழவி பிறக்கு முன் தாய்க்கு இரு தன பாரங்களில் பால் சுரக்க அருள் புரிகின்றான்.

சைக்கிள், மோட்டார், பஞ்சாலை முதலிய இயந்திரங்கட்கு அடிக்கடி கிரீஸ் போடுகின்றார்கள். இல்லையேல் அவைகள் எளிதாக இயங்கா. நமது உடம்பில் முழங்கால்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விரல்கள் இவைகளின் இடையே யார் ‘கிரீஸ்’ விடுகின்றார்கள். இவைகள் பிறந்த நாள் தொட்டு இறக்கும் வரை வளைந்து வளைந்து எளிதாகத் தொழில் புரிய ஒருவகைப் பசை அவைகளுக்குள் உண்டாகுமாறு இறைவன் அமைத்திருக்கின்றான். இந்தக் கருணையை நாம் நினைக்கின்றோமா? இவ்வண்ணம் இறைவன் அருள வில்லையானால் இந்தக் கைகளால் நாம் ஒரு வேலை செய்ய முடியுமா? நடக்க முடியுமா? இருக்க முடியுமா? நன்கு சிந்தியுங்கள். அவன் கருணையை நினைக்க வேண்டாமா? நினைத்து உருக வேண்டாமா?

**‘கள்ளூருகு மலர்மணம்போல் நலந்தெங்கும்**
**கலந்தோய்நின் கருணைக்கு அந்தோ**
**முள்ளூருகும் வலியபராய் முருடுருகும்**
**உருகாத முறைசேர் கல்லும்**

வள்ளுருகும் மலையுருகும் மண்ணுருகும்
மரமுருகும் மதியி லேன்தன்
உள்ளுருகும் வகையிலைஎன் செய்கேன்நான்
ஏன்பிறந்தேன் ஒதிய னேனே'

என்று இராமலிங்க அடிகளார் கூறும் இந்த இனிய பாடலைப் பலமுறை படியுங்கள். எத்துணை உணர்ச்சியில் இந்தப் பாடல் எழுந்தது, சிந்தியுங்கள்!

இறைவனுடைய கருணைத் திறத்தில் மற்றொன்றைக் கூறுகின்றேன்.

இந்த உடம்பை அமைத்து அதில் உயிரையும் தங்குமாறு அமைத்துள்ளார். ஒன்பது ஓட்டைக்குள் பிராணவாயு சென்று சென்று திரும்புகின்றதே, இது யார் செய்த திறம்? நாம் பிராண வாயுவை விடும்போது மீளவும் அதனைக் கவனமாகவா உள்ளுக்குச் செலுத்துகின்றோம்? உரையாடும் போதும் உறங்கும்போதும் தொழில் புரியும்போதும் அந்த மூச்சு சென்று சென்று திரும்புகின்றதே! வெளிவிடப்பட்ட மூச்சு அப்படியே போய்விட லாந்தானே! அவன் அருளால் அல்லவா அது பெயர்ந்தும் உடலுக்குள் மீளுகின்றது. மூச்சும் பேச்சும் அவன் அருளால் இயங்குகின்றன. பரம கருணாநிதியாகிய எம்பெருமான் நம்மை வாழ்விக்கும் பொருட்டு இந்தப் புன்புலால் யாக்கையுள் தானும் புகுந்து இருந்து இதனை இயக்கிக் கொண்டிருக் கின்றான். அதனால் அவன் இயவுள் எனப் படுகின்றான்.

புன்புலால் யாக் கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோ யிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி எளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே!'

என்ற திருவாசகத்தைப் படியுங்கள்.

இன்னும் ஒரு திருக்கருணையை நினையுங்கள்.

இந்த உடம்பை ஆண் பெண் இருபாலார் கட்கும் வேறு வேறு விதவிதமாகவே உலகந் தோன்றிய நாள் தொட்டுப் படைக்கின்றார். ஒருவர் முகம் - மூக்கு போல் மற்றொருவர் முகம் - மூக்கு இல்லை. ஐந்து கண்டங்க ளிலும் உள்ள முந்நூறு கோடி மக்களுக்கும் வேறு வேறு வடிவ அமைப்பை அமைத்தார். இதற்கு என்ன காரணம்? நன்கு ஊன்றி உன்னுங்கள்.

ஒரு கோடி புடைவை நெய்கின்றவன் எத்தனை விதங்கள் அமைக்க முடியும்? இறைவன் வேறு வேறு முகச் சாயல் அமைக்க வில்லையானால் மனித வாழ்க்கை புனித வாழ்க்கையாக அமைய முடியுமா? எல்லாப் பெண்களுக்கும் ஒரே மாதிரியான முகமிருந் தால், அவரவர்கள் தத்தம் மனைவியை வேறு பிரித்து அறிந்து ஒழுங்காக வாழ இயலுமா? அவ்வண்ணமே மகளிர் தத்தம் கணவன் என்று அறிந்து கற்பு நெறியுடன் வாழ்க்கை நடத்த முடியுமா? வேட்டிகளைத் தூய்மைப் படுத்தும் ஏகாலி உடைகளுக்குச் சில குறியீடு போட்டு வைப்பான். அவரவர் ஆடைகளை அவரவர்பால் சேர்க்கும் பொருட்டு, இல்லை யேல் ஒருவருடைய ஆடை மற்றொருவர்பால் செல்லும், அதனால் சுகாதாரங்கெடுமன்றோ? உடையை மாற்றியுடுத்ததனால் சுக்கிரருடைய மகள் தேவயானைக்கும் இடபபன்மனுடைய (விருஷபர்வா) மகள் சர்மிஷ்டைக்கும் பெரிய கலகம் வந்து இடர்ப்பட்ட வரலாறு மகாபாரதத்தில் வருகின்றது.

அதுபோல், பார்த்த மாத்திரத்தில் 'இவள் நம் மனைவி' 'இவர் நம் கணவர்' என்று அறிந்து வாழ்வதற்காகவே வேறு வேறு உருவ மாறுபாடுகளை இறைவன் அமைக்கின்றான். உலகந்தோன்றிய நாள் தொட்டு உலகம் ஒடுங்குகின்றவரை தோன்றுகின்ற அத்தனை பேருக்கும் வேறு வேறு அச்சு மாற்றிப் படைக்கின்ற இறைவனுடைய பேராற்றலையும்

பெருங்கருணையையும் நினைத்தால் உள்ளம் மட்டும் உருகாது; என்பும் உருகும். திருமூலர் கூறுகின்றார்;

**'அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்**
**என்பும் உருகி இராப்பகல் ஏத்துவன்**
**என்பொன் மணியே இறைவனை ஈசனைத்**
**தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே,'**

**'என்புருக இனவேல் நெடுங்கண்கள்**
**இமைபொருந்தா பலநாளும்'**

என்கின்றார் ஆண்டாள் அம்மையார்

**'தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்**
**குழாங்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி**
**ஆராத மனக்களிப்போ டழுத கண்ணீர்**
**மழைசோர நினைந்துருகி ஏத்தி நாளும்**
**சீராந்த முழவோசை பாவை காட்டும்**
**திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்**
**பேராழி யம்மானைக் கண்டு துள்ளிப்**
**பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே,'**

என்கிறார் குலசேகர ஆழ்வார்

உள்ளம் உருகி உணர்வு உருகி ஊன் உருகி என்பும் உருகினால் கண்ணீர் ஒரு துளி இரு துளியாகவா வரும்? ஆறு போல் பெருகும், பட்டினத்துச் சுவாமிகள் கூறும் இந்த அரிய பாடலைப் பாருங்கள்.

**நீறார்ந்த மேனி உரோமஞ் சிலிர்த்துளம் நெக்குருகிச்**
**சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே**
**மாறாத் தியானமுற் றானந்தமேற் கொண்டு மார்பிற் கண்ணீர்**
**ஆறாய்ப் பெருகக் கிடப்பதென்றோ கயிலாயத்தானே**

தாயுமானார் இதுபற்றி வருந்திக் கூறுகின்றார்.

**'கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும்என்**
**கல்நெஞ்சம் உருகவிலையே'**

**'என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப உடல்**
**இளகமனது அழலின் மெழுகாய்**
**இடையறாது உருக; வருமழைபோல் இரங்கியே**
**இருவிழிகள் நீர் இறைப்ப**
**அன்பினால் மூர்ச்சித்த அன்பர்க்(கு) ஆங்ஙனே**
**அமிர்தசஞ் சீவிபோல் வந்து**
**ஆனந்த மழைப்பொழிவை உள்ளன்பிலாதஎனை**
**யார்க்காக அடிமை கொண்டாய்?'**

**'அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப**
**அன்பினால் உருகி விழிநீர் ஆறாக'**

இறைவனிடத்தில் நாம் ஏதேதோ வேண்டும் என்று குறையிரந்து வேண்டுகின்றோம்.

பொன் வேண்டும், பொருள் வெண்டும், வீடு வேண்டும், மாடு வேண்டும், பதவி வேண்டும், உதவி வேண்டும் என்றெல்லாங் கேட்கின் றோம், எதைக் கேட்க வேண்டும் என்று நமக்குத் தெரியவில்லை. மேற்கூறியவை யெல்லாம் இந்திரஜாலம் போல் கனவு நிலைபோல் தோன்றி மறையக் கூடியவைகள் தாமே அவைகளால் நமது ஆன்மாவுக்கு என்ன பயன்? எத்தனை செல்வமிருந்தாலும் உண்பது நாழி. உடுப்பது நான்கு முழந் தானே? பல வீடுகள் இருப்பினும் படுப்பது ஆறடி இடத்தில்தானே?

நெசவுத் தொழில் செய்கின்ற ஒருவன் காட்டில் சென்று கடவுளை நோக்கித் தவஞ் செய்தான். அவன் கடுந்தவத்துக்கு இரங்கிக் கடவுள் தோன்றினார். "அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கடவுள் வினவினார். அறிவில்லாத அந்த அசடன், "சுவாமி! எனக்கு எட்டுக் கைகள் வேண்டும்" என்றான். கடவுள் சிரித்து, "ஏனப்பா! உனக்கு எட்டுக் கைகள் எதற்கு" என்று வினவினார். "தெய்வமே! நான் நெய்கின்றவன், எட்டுக் கரங்கள் இருந்தால் ஒரே சமயத்தில் நாலு புடவைகள் நெய்வேன், அதிக வருவாய் வரும், என் வறுமை தீரும்" என்றான். கேட்ட வரந் தருகின்ற ஆண்டவன் அவ்வண்ணமே தந்து மறைந்தனர்.

எட்டுக் கரங்களும் ஒரே உடம்பில் இருப்பதால் ஒரு புடவைதான் நெய்ய முடியும் என்பதை அந்த மந்தக மதியாளன் உணரவில்லை.

எட்டுக் கரங்கள் அவனுக்கு முளைத்தன. அவன் ஊருக்கு வந்தான். அவனைக் கண்ட ஊரவர், "இவன் ஒரு அரக்கன் போலும்; எட்டுக் கரங்களால் நமக்கு இடர்புரிவான்" என்று கருதி அஞ்சி, எல்லோரும் ஒன்று கூடி தடி எடுத்து அடித்து அவனைக் கொன்று போட்டார்கள்.

அம்மூடன் வாங்கிய வரம் அவன் உயிருக்கு இறுதியைத் தந்தது. இப்படி நாம் விபரீதமான வரங்களைக் கேட்கக் கூடாது. பொன்னும் பொருளும் ஒரு அளவில் இருந்தால் சரி. அளவுக்கு அப்பால் போனால் அவை பெருந் துயரத்தைத் தரும்.

குளிப்பதற்கு ஒரு ஆறு அல்லது குளத்தில் தண்ணீர் இருக்க வேண்டும். மார்பளவு இடுப்பளவு இருந்தால் அபாயம் இன்றிக் குளிக்கலாம். ஆனால் மிகுந்த ஆழமாக இருந்தால், அந்த நீரே நம்மைக் கொல்லு மல்லவா?

ஞான சூரியராக விளங்கிய அருணகிரிநாத சுவாமிகள் முருகனிடம் வரம் கேட்கின்றார். எதனைக் கேட்டார்? இதோ பாருங்கள் அவர் கேட்ட வரம்;

'முருகன் குமரன் குகன் என்றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்!'

'மலர்ப பதத்தினில் உருகவும இனியருள்
புரிவாயே!'

"இறைவனே! இளம்பூரணனே! உனது திருவடியை நினைந்து என்றும் உள்ளம் உருகுமாறு அருள்புரிவாய்" என்பதுதான் வரம்.

இவ்வாறு முதலில் ஊன் உருகி உள்ளம் உருகி உணர்வு உருகி என்பு உருகினால் இறுதியாக நம் உயிர் உருகும். இது தான் இறுதிநிலை. இறைவன் உயிர்க்கு உயிராய் விளங்குகின்றான். நன்கு கவனியுங்கள்.

ஒரு தங்கத்தின் மீது ஒரு இரத்தினக்கல் இருக்கின்றது. அத்தங்கம் உருகினால் அம்மணி தங்கத்தில் நன்கு அழுந்தப் பதிந்து கொள்ளும். அதுபோல் நமது உயிராகிய தங்கத்தின் மீது இறைவனாகிய இரத்தினமணி விளங்குகின்றது. உயிர் உருகியவுடன் இறைவன் அந்த உயிரில் ஒன்றுபட்டு விடுகின்றான். "நீராயுருக்கி என் ஆருயிராய் நின்றானே" என்று இந்தக் குறிப்பை மாணிக்க வாசகப் பெருமான் நமக்கு உபதேசிக்கின்றார்.

'உள்ளம் உருகின் உடனாவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற'

என்பது திருவுந்தியார் திருவாக்கு.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விண்ணோர் பெருமானே
எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்'

'வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச
செவ்வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே,'

என்ற திருவாசகத் திருப்பாடல்களைப் படியுங்கள்.

எனவே, நாம் இறைவனுடன் இரண்டறக் கலந்து இடையறாத பேரின்பத்தைப் பெறுவதற்கு உயர்ந்த ஒரு வழி, இறைவனுடைய திருவருளை நினைந்து உள்ளம் முதலிய அனைத்தும் உருகி நிற்றலாம்.

# ஸ்ரீ ருத்ராக்ஷ மஹிமை

சிவபக்திப் பிரசாரமணி, திருத்தொண்டர் மாமணி
ஆங்கீரஸ S. வெங்கடேச சர்மா

ஸ்ரீ ருத்ரன் என்றால் சிவபெருமான். அக்ஷம் - கண். எனவே ருத்ராக்ஷம் என்றால் சிவபெருமானது கண் என்று பொருள். சிவ பெருமானது பெருமை எப்படியோ அப்படிப் பெரியது ஸ்ரீ ருத்ராக்ஷத்தின் பெருமையும் ஆகும். அதனை முழுதும் விளக்க இங்கு இடம் போதாது என்றாலும் ஒரு சிறிது விளக்குவோம்.

ஸ்ரீ ருத்ரன் என்றால் துன்பத்தைப் போக்குபவன் என்றும் பொருள் தரும். 'இன்னலன் கடலுள் பட்டார் யாரையும் எடுக்கும் நீரால், உன்னரும் பரம மூர்த்தி உருத்திரன் எனும் பெயர் பெற்றான்.' என ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும், "இடும்பையது ஓட்டலின் உருத்திரன்" என சிவஞான யோகிகளும், கூறியிருப்பது இங்கு கருதற்குரியதாகும். அவனுடைய கண்களிலிருந்து தோன்றிய ருத்ராக்ஷமும் அத்தகையதே என்பது கூறவும் வேண்டுமோ?

ஸ்ரீ ருத்ராக்ஷத்திற்கு தெய்வமணி, புனித மாமணி, நாயகன் விழிமணி, கண்மணி, அக்கமணி, கடவுள் கண்மணி, கண்டி, அக்ஷம், சிவமணி எனப்பல பெயர்களும் உள்ளன. ருத்ராக்ஷமாலை கழுத்துடன் இணைந்து விட்டால் கண்டிகை என்றும் மார்பு, வயிறு வரை தழைய இட்டால் தாழ் வடம் என்றும் ஏனைய ஆபரணங்களினின்றும் வேறுபட்டு இருப்பதால் புனிதாபரணம் என்றும் பலவாறு வழங்கவும்படும்.

**தோற்றம் :** அனைத்து வலிமை மிக்க முப்புராதிகள் என்னும் அரக்கர்கள்., பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று நகரங்களைப் பெற்று, பலவிதத்திலும் தேவர்களுக்கும் தேவமாதர்களுக்கும் துன்பம் விளைவித்து வந்தனர். வருத்தம் தாளாத தேவர்கள் கைலாயத்தை அடைந்து உமையொரு பாகனை வாழ்த்தி வணங்கி வழிபட்டு, தங்கள் இடர்களைக் களையுமாறு விண்ணப்பித்தனர். அப்போது இறைவன் தம்முடைய மூன்று திருக்கண்களையும் மலர்த்திக் கொண்டிருப்ப அவைகளினின்றும் நீர் பொழிந்தன.

அப்படி விழுந்தவற்றுள் வலக்கண்ணிலிருந்து விழுந்த கண்ணீர்த் துளியிலிருந்து கபில நிறம், பொன் நிறம், செந்நிறம் ஆகிய மூவகையாக 12 ருத்ராக்ஷ மரங்களும் இடக் கண்ணிலிருந்து வெண்மை நிறமுள்ள 16 ருத்ராக்ஷ மரங்களும், நெற்றிக் கண்ணிலிருந்து விழுந்த கண்ணீர்த் துளி கருநிறமுள்ள 10 ருத்ராக்ஷ மரங்களுமாகத தோன்றின. இம் மரங்களின் விதைகளே ருத்ராக்ஷ மணி களாகும். இவை இயற்கை யாகவே துவாரத்துடன் தோன்றுவதால இவைகளை மாலைகளாக்கி அணிந்து கொண்டு மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவதற்காகவே இறைவனால் படைக்கப்பட்டன என்று கருதவேண்டி உள்ளது. இம்மணிகளுக்கு வேறு உபயோகம் இருப்பதாகத் தெரியவில்லை.

**ருத்ராக்ஷத்தின் அமைப்பு :** பெரிய அளவுள்ள ருத்ராக்ஷம் அதிக பயனைத் தரவல்லது. ருத்ராக்ஷத்தின் (முகம்) மேல்பாகம் பிரம்மா, (துவாரம்) நடுப்பாகம் சிவபெருமான், அடிப்பாகம திருமாலும், வெளிப்புறங்களில் சகல தேவர்களும் உறைகிறார்கள். இக்கருத்தை மனத்திற் கொண்டு அணிந்தால் இகபர சுகங்களை அடைவார்கள். பெரிய ருத்ராக்ஷங்களை அணிந திருப்பவர்களைப் பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் தீண்டு வதில்லை. அதனால் தான் காட்டில் வசித்த முனிவர்களும், ராமரும் பெரிய ருத்ராக்ஷங்களை நிறைய அணிந்திருந்தார்கள்.

ஸ்ரீ ருத்ராக்ஷத்தின் மஹிமை அறிந்து போற்றி அணிந்துள்ள ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு அசுவமேத யாகம் செய்த புண்ணியம் கிடைக்கிறது. கலியுகத்தில் அசுவமேதயாகம் செய்யக்கூடாது என சாஸ்திரங்கள் கூறுகின்றன. நாம் சுலபமாக ருத்ராக்ஷம் அணிந்து அப்புண்ணியத்தை பெறுவோம். ருத்ராக்ஷம் அணிவதால 21 தலை முறையினருக்கும் சிவகதி கிடைக்கச் செய்கிறது. இந்த ஸ்ரீ ருத்ராக்ஷத்தில் சிவபெருமானை எழுந்தருளச் செய்து சிவமூர்த்தியாக வழிபடுவது மிகுந்த சிறப்புடையதாகும்.

**ருத்ராக்ஷத்தின் முகமும் பயனும் :** ருத்ராக்ஷத்தின் கீழ்மேலாக (நெடுக்கு வசத்தில்) அமைந்த கோடுகளை வைத்து அதன் முகங்களை அறிய வேண்டும். ருத்ராக்ஷத்தில் 1 முதல் 21 முகங்கள் வரை உள்ளன. இப்போது நமக்கு எளிதில் கிடைப்பது 5 முக ருத்ராக்ஷமே ஆகும். இவைகளை காலாக்னி ருத்ரஸ்வரூபம் என்று கூறுவர். காலாக்னி ருத்ரர் என்பவர் சிவபெருமானின் இருதயத் திலிருந்து தோன்றியவராதலால் அவர் மஹிமையை எளிதில் அறிந்து கொள்ளலாம். அடுத்து நமக்குக் கிடைப்பது 6 முக ருத்ராக்ஷங்கள். இவைகளையே கார்த்தியே ஸ்வரூபம் என வழங்குவர். ஆறுமுக மணிகளை முருக பக்தர்கள் விரும்பி அணிந்து கொள்வர். கற்கண்டு எந்த வர்ணம், வடிவம் பெற்றிருப்பினும் அதன் சுவை மாறுவதில்லை. அதுபோலேவே ருத்ராக்ஷமும் எத்தனை முகம் கொண்டதாக இருப்பினும், அதன் புனிதம் ஓரே தன்மை யானது என உணர்ந்து எளிதில் கிடைக்கும் ருத்ரா மணியை வாங்கி பால், தேன், பஞ்சகவ்வியம், புண்ணிய தீர்த்தத் தாலும், மேலான சிவலிங்க அபிஷேக தீர்த்தத்தாலும் சுத்தி செய்து (த்ரயம்பகம்) மந்திரம், திருஐந்தெழுத்தை ஓதி அணிய வேண்டும். "அனந்தாவை வேதா" என்று கூறியபடி வேதங்களின் பாகுபாடுகள் எத்தனை இருந்தாலும் அவற்றின் சாரம் சிவபெருமானே என்பது போலவே இதனையும் கொள்க.

**பெருமைகள் :** ருத்ராக்ஷம், கல், செம்பு இவற்றிற்கு மந்திரங்களைச் சேமித்து வைக்கும் ஆற்றல் உண்டு. நாம் அனைவரும் ஒரு ருத்ராக்ஷத்தையாவது கழுத்தில் அணிந்திருத்தல் வேண்டும். ருத்ராக்ஷத்தை அணிந்தவர் சிவநாமத்தை ஒருமுறை உச்சரித் தால் 108 முறை உச்சரித்த பலனை அடை கிறார்கள். ருத்ராக்ஷத்தை அணிந்த வர்கள் மது, மாமிசம் முதலியவற்றை அறவே விலக்க வேண்டும். பிரம்மச்சாரி இல்லறத்தான், வானப்ரஸ்தன், சந்நியாசி ஆகிய நான்கு வகையினரும், அந்தணர், அரசர், வைசியர் வேளாளர் ஆகிய நான்கு வருணத்தினரும் ருத்ராக்ஷம் அணியலாம்.

ருத்ராக்ஷம் ஒன்று அணிந்தவரை பேய், பிசாசு அண்டாது. ருத்ராக்ஷம் அணியாமல் சிவபூஜை முதலியன செய்பவர் அவற்றின் முழுப் பயனையும் அடைய மாட்டார்கள். ஆயிரம் மணிகளை அணிபவர்களை பரமசிவனாகவே கருதி வணங்குவர்.

**ருத்ராக்ஷம் அணிய வேண்டிய காலம் :** அனுஷ்டானம் செய்யும் போதும் , சிவமந்திரம் ஏனைய மந்திரங்கள் ஜபம் செய்யும் போதும் சிவத்தியானம், சிவபூஜை ஏனைய வழிபாடாற்றும் போதும், தேவார திருவாசக, திருப்புகழ் பாராயணம் செய்யும் காலங்களிலும், தீர்த்தமாடும் போதும், ஆலய வழிபாட்டின் போதும் அணிய வேண்டிய காலங்களாகும்.

**அணியத் தகாத காலம் :** உறக்கம், மலசலம், கழித்தல், நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருக்கும் போதும், பிறப்பு, இறப்பு ஆசௌச காலங்களிலும் ருத்ராக்ஷ மாலை அணியக் கூடாது. கழுத்தில் ஒன்று அல்லது மூன்று ருத்ராக்ஷம் அணிந்திருப்பவர் எப்போதும் அணிந்திருக்கலாம். மாலை கோர்க்கும் போது ருத்ராக்ஷத்தின் முகத்தோடு முகமும் அடியோடு அடியும் சேருமாறு சேர்க்க வேண்டும்.

## இலையமுதம்

# குறுஞ்சா, குறுஞ்சான் அல்லது சர்க்கரைக் கொல்லி

## *GYMNEA SYLVESTERA*

**மருத்துவச் சிறப்புக்கள் :** இது ராச மூலிகைகளில் ஒன்றாகும். எனவே வீடுகளில் கவனத்துடன் வளர்க்கப்பட வேண்டும். கிழமைக்கு ஒரு தடவையாவது இக் கீரையை உண்பதால் நோய் வராமல் தடுக்கலாம். உடல் உழைப்பின்றி இருப்போர்க்கும், கண்டவற்றை எல்லாம் உண்டு உடலை வளர்த்திருப்போருக்கும் மிக இலகுவில் ஏற்படும் குறைபாட்டு நோயாகிய நீரிழிவு, சர்க்கரை நோய் அல்லது மதுமேகம் என அழைக்கப்படும் நோய்க்கு இது அருமருந்து. வாதநோய், சூளை, சொறி போன்றவை வராது தடுக்கவும் வந்தவற்றின் வேகத்தைக் குறைக்கவும் இக் கீரையினை உணவாக அருந்துதல் நன்மை பயக்கும். பெரும்பாடுடைய பெண்களுக்கு மலட்டுத்தன்மையை நீக்குவதற்கும் இக் கீரை மிகப் பயனுடையது. இதன் சமையல் முறையை அறிந்த குடும்பத் தலைவி சுகவாழ்வின் இரகசியத்தை அறிந்த ஞானப் பெண்ணாக அமைவாள்.

**சர்க்கரைக் கொல்லிப் பச்சடி:** குறுஞ்சா இலைகளைப் பொடிதாக அரிந்து சுத்தமாக்கிய பின்னர் தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், சுட்டெடுத்த வெள்ளைப்பூடு, கறிவேப்பில்லையோடு மற்றைய சுவையூட்டிகளையும் பட்டுப் போல் அரைத்து தேசிப்புளியோடு சுவையாக்கிக் கிழமைக்கு இரு தடவையாவது உணவாக்குவது உடலுக்கு மருந்தாகவும் விருந்தாகவும் அமையும். இப் பச்சடியினை இன்னும் சுவையூட்ட விரும்பின் வறுத்தெடுத்த பொட்டுக் கடலையையும் சேர்த்து அரைத்து மேலும் சுவையாக்கலாம்.

**சர்க்கரைக் கொல்லி துவையல் :** பச்சடிக்கும் துவையலுக்கும் உள்ள வேறுபாடுகள் சமையல் தெரிந்தவர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. சர்க்கரைக் கொல்லி துவையலுக்கு தேங்காய்த் துருவலைக் கூட்டி நீரைக் குறைத்தலே பக்குவமாகும். எந்த விதமான அரையலுக்கும் நீரைக் கூட்டினால் அது பச்சடியாகும்.

**சர்க்கரைக் கொல்லி வறுவல் :** முன்கூறியது போல் கீரைகளை மிக மெல்லியதாக வாய்க்கு இதமானதாக அரித்தெடுத்து, சுத்தமாக்கி, உப்பு நீரில் நன்றாக வேக வைத்த பின் நீரை நன்கு வடித்தெடுத்து, முன் கூறிய பச்சடிக் கூட்டுகளை (தேங்காய்த் துருவல், சுட்டெடுத்த செத்தல் மிளகாய், வெள்ளைப் பூடு, கறி வேப்பிலை, வெங்காயம், நற்சீரகம், பெருஞ்சீரகம், உப்பு) அரைத்தெடுத்து வேக வைத்து, பிழிந்தெடுத்த கீரைகளுடன் சேர்த்துப் பிசைந்து, நெய், எள்ளெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றுள் ஒன்றுடன் கடுகு, செத்தல் மிளகாய்த் துண்டுகள், வெங்காயம் முதலியவற்றுடன் சேர்த்துத் தாளிதம் செய்தலே பக்குவ முறை இத்தகைய வறுவல் ஆரோக்கியம் தரும் உருசியான உணவாகும். புலால் சேர்க்க விரும்பின் முட்கள் குறைவான மீன்களின் சதை, திருக்கைச் சதை, கூனி இறால் முதலியவைகளில் ஒன்றைத் தெரிவு செய்து சமையலாக்கலாம். பால் சுரப்புக் குறைவான தாய்மாருக்கும், கையுளைவு உள்ளோர்க்கும் இவ்வுணவு வேண்டிய பயனளிக்கும். நீரிழிவு உடையோர்கள் மேற்கண்ட உணவை உண்டபின் சிறுநீரைச் சர்க்கரைப் பரிசோதனையில் ஈடுபடுத்தும் பொழுது சர்க்கரை இல்லாதிருப்பதைக் காணலாம். நீரிழிவு என்பது மனித உடலில் உள்ள கானில் சுரப்பியாகிய கணையம் தனது இன்சுலினைப் போதியளவு சுரக்காததன் காரணத்தால் நாம் உண்கின்ற மாப்பொருளை சக்தியாக மாற்றிக் கலங்களில் சேர்க்கப்படாது சிறுநீருடன் கழிவடைகின்ற பயங்கர நிலையாகும்.

Registered as a News Paper at the G.P.O
Regd No. QD/71/News 2007

# சந்தேகம் தெளிதல்

*- திருமுருக கிருபானந்த வாரியார்*

**கேள்வி :** உபவாசம், விரதம் இவற்றால் மனம் இறுகிப் போய்விடும் என்றும் பிறருடைய துன்பம் கண்டு இளகும் தன்மை அகன்று விடும் என்று சொல்கிறார்களே?

பதில் : உபவாசத்தாலு ம் விரதத்தாலும் மனம் இறுகிப் பிறருடைய துன்பங் கண்டு இரங்குந் தன்மை போகும் என்று கருதுவது பிழை.

உபவாசத்தால் தூய்மை, ஒருமைப்பாடு, உடல்நலம் இவைகள் உண்டாகும். உபவாசத்தால் பட்டினியின் துயரம் நன்கு விளங்கும். இதுபோல்தானே உணவு கிடைக்கப் பெறாத ஏழைகள் பசியால் துயரம் அடைவார்கள் என்ற எண்ணம் நிச்சயமாக உண்டாகும். ஆகவே இரக்கம் உபவாசத்தால் விளையும்.

மகா சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கந்த சஷ்டி முதலிய விரத காலங்களில் விரதம் இருப்பது மறுநாள் பாரணம் பண்ணும் போது பலருக்கு அமுது படைக்கின்றார்கள். இது இன்றும் நடைபெறுகிறது.

பணக்காரனுக்கு எல்லா வசதிகளும் இருப்பதனால் அவனுக்குப் பசியே தெரியாது. அவன் உபவாசம் இருப்பதனால் பசியை அறிய முடிகின்றது. பசியை அறிந்து பசித்தோர்க்கு உதவும் பரிவு உபவசத்தால் ஏற்படுகின்றது.

ஆதலால் உபவாசம் சிறந்த சாதனமாகும்.

முற்கலர் என்ற ஒரு முனிவர் இருந்தார். அவருக்கு மனைவியும் மகனும் மருமகளும் இருந்தார்கள். அவர் காட்டில் உதிர்ந்த தானியங்களைப் பொறுக்கி எடுத்து வைப்பார்.

அமாவாசை, பௌர்ணமி என்ற இரு நாட்களில் உண்ணும் விரதம் பூண்டவர். அமாவாசை யன்று தானியத்தை மாவாக்கி நால்வரும் உண்ணத் தொடங்கும் போது ஓர் அதிதி வந்தார். பதினைந்து நாட்கள் பட்டினி கிடந்த முற்கலர் தனக்குள்ள அரிசி மாவைத் தந்தார். அதனை உண்டு திருப்தி அடையாத அதிதிக்கு மனைவியும் தந்தாள். அதனாலும் நிறைவு பெறாத அவருக்கு மகனும் மருமகளும் தம் பங்கு மாவை வழங்கினார்கள்.

அடுத்த பௌர்ணமியில் உண்ணப் போகும் வேளையிலே அதே அதிதி வந்தார். 'அடப்பாவி இன்றும் வந்தனையா?' என்று எண்ணாமல், முன்னையிலும் பன்மடங்கு அகமும் முகமும் மலர்ந்து நால்வரும் மாவை வழங்கினார்கள். இவ்வாறு ஐந்து முறையும் அவர்கள் சிறிதும் வருந்தாது வழங்னார்கள். அதிதி அறக் கடவுக் கடவுளாகக் காட்சியளித்து, அந்த நால்வருக்கும் பரகதி வழங்கினார். இந்த வரவாறு

இவ் ரிகழ்
சைவந்தி நிறு வனத்தினரால்
மெய்கண்டான் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது